
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 11 திங்கட்கிழமை (25.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

# புலிகளின் தலைவர் பிரபாகரன் கடந்த 17ஆம் திகதி வீர மரணம்



## உலகுவாழ் தமிழ் மக்களுக்கு பத்மநாதன் அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும், தலைமைத் தளபதியுமாகிய வேலுப்பிள்ளை பிரபாகரன், சிங்களப் படைகளுடனான போரில் கடந்த 17ஆம் திகதி வீரச்சாவை தழுவியுள்ளார் என தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வெளியுறவுத்துறை செயலர் செல்வராசா பத்மநாதன் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனை சந்திக்க காத்திருந்த கூட்டமைப்பு ஏமாற்றமே எஞ்சியது

(கொழும்பு)

இலங்கை வந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ மூனை சந்திக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்த முயற்சிகளை அரசாங்கம் தகர்த்துள்ளது.

பான் கீ மூன் இலங்கைக்கு வந்திருந்த வேளை அவரையும், ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பல்வேறு வழிகளில் முயற்சித்தது.

ஏற்கனவே இலங்கைக்கு வருவதற்கு முன்னர்,தமிழ் கட்சிகளை சந்தித்து கலந்துரையாடவிருப் (12ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி முகாம்களைப் பராமரிக்க ஐ.நா.அமைப்புகளுக்கு அனுமதி

### பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தெரிவிப்பு

(லண்டன்)

நலன்புரி முகாம்களைப் பராமரிக்க ஐ.நாவின் அனைத்து அமைப்புக்களையும் அனுமதிப்போம் என ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீமூனிடம் உறுதியளித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து பி.பி.சிக்கு அவர் வழங்கிய செவ்வியில் தெரிவித்திருப்பதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பான் கீ மூனை போய்க் காணவேண்டும் என்றால் அவர்களுக்கு அதற்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருந்திருந்தது.

இவர் இடம் பெயர்ந்த மக்கள்இருக்கின்ற முகாமுக்கு போயிருந்தார். கண்டிக்கு போயிருந்தார். ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து பத்திரிகையாளர் மாநாடும் நடத்தியிருந்தார். அங்கெல்லாம் (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை -திருகோணமலைக் கிடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறமாட்டாது என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக பயணிகள் கப்பல் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந)

## ஐ.நாவுக்கு வரும் தமிழர் விவகாரம்

# இலங்கையைக் காப்பாற்ற இந்தியா-சீனா கூட்டாக முயற்சி

வன்னியில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் தீர்மானங்களை முறியடிப்பதற்கு சீனாவும் இந்தியாவும் கூட்டாக முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின்(02ஆம் பக்கம் பார்க்க)

## தளபதிகள் பொட்டு அம்மான், சூசை வீர மரணம்

# வெள்ளைக் கொடியுடன் சென்ற போதே நடேசனும் புலித்தேவனும் கொல்லப்பட்டனர்

## பி.பி.சி. தமிழோசைக்கு பத்மநாதன் செவ்வி

(லண்டன்)

தளபதிகள் பொட்டு அம்மான், சூசை ஆகியோர் வீரமரணம் அடைந்துள்ளதாகவும் வெள்ளைக் கொடியுடன் வருமாறு, இலங்கை அரசின் அறிவுறுத்தலுக்கு அமைய படையினரை நோக்கிச் சென்ற நடேசனும், புலித்தேவனும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் விடுதலைப் புலிகளின் வெளியுறவுப் பேச்சாளர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு அவர் வழங்கிய செவ்வி இங்கு தரப்படுகின்றது.

**கேள்வி:** விடுதலைப் புலிகளின் பிற தலைவர்கள் பொட்டு அம்மான் உட்பட பிற தளபதிகளின் நிலை பற்றி அரசு கூறும் கூற்று உண்மையா?

**பதில்:** எனக்குக் கிடைத்த தகவல்களின் படி தளபதிகள் பொட்டு அம்மான், சூசை போன்றவர்களும் தலைவரின் பாதையில் வீர மரணத்தை தழுவிக்கொண்டார்கள்.

**கேள்வி:** நடேசன், புலித்தேவன் ஆகியோர் சரணடைய முன்வரும்போது அவர்கள் இராணுவத்தினரால்(12ஆம் பக்கம் பார்க்க)

# இனி ஒரு தமிழன் துப்பாக்கியால் இறந்தாலும் அதன் முழுப் பொறுப்பும் மகிந்தவையே சாரும்!

## ஆனந்த விகடனின் ஆசிரியர் தலையங்கம்

(சென்னை)

ஈழத் தமிழர் விவகாரத்தில் இறையாண்மையின் பேரால் இரக்கமற்ற நாடகத்தை இனியும் இந்தியா ஆடக்கூடாது என்று தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் பிரபல வார இதழான ஆனந்த விகடன் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக 'இரக்கமற்ற இறையாண்மை' எனும் தலைப்பில் ஆனந்த விகடனில் வெளியிடப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முடிந்து வாக்குகளை எண்ணிக் கொண்டிருந்த அதே நேரம் இலங்கை மண்ணில் செத்து விழுந்த தமிழர்களின் சடலங்களைக் கணக்கு பார்த்துக்கொண்டே முன்னேறியது இராணுவம்.

முந்தைய தேர்தலை விட வலுவாக வென்று விட்டோம் என்று ஆளும் கூட்டணியினர் இங்கே வெடி போட்டு கொண்டாடிய அதே வேளை... இறுதி வெற்றியை நெருங்கி விட்டோம் என்ற வெறியோடு வன்னியில் பீரங்கிகள் வெடித்து கரும் புகையால் விண்ணை நிரப்பின.

விரும்பிய இலாகாவை கேட்டுப் பெறுவோம் என்ற மகிழ்ச்சியில் இங்கே இனிப்பு பரிமாற்றங்கள் தொடங்கிய அதே சமயம், பிரபாகரனைக் கொன்று விட்டோம் என்று இனிப்பு ஊட்டிக் கொண்டார்கள் சிங்கள மக்கள்.

விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களை பிணைக் கைதிகளாக முன்னிறுத்தி யுத்த களத்தில் பலிகொடுக்கிறார்கள் என்று இனி மேலும் இலங்கை அரசு சொல்ல முடியாது.

இனி ஒரு தமிழன் அங்கே துப்பாக்கியாலோ பசியாலோ உயிர் நீத்தாலும் அதற்கான முழுப் பொறுப்பும் ராஜபக்ஷவைத்தான் சாரும் என்று உறுதியான குரலில் இந்தியா உடனே எச்சரிக்க வேண்டும். அது அடுத்த நாட்டு விவகாரம் என்று சொல்லி இனியும் நம் நாடு பதுங்கு குழிக்குள் முடங்கியிருக்க கூடாது.

குண்டு மழையால் விளைந்த காயங்களாலும் குடலை சுருட்டும் பசியாலும் வாட்டி வதைக்கும் நோயாலும் உயிரோடு செத்துக் கொண்டிருக்கும் மிச்சம் மீதித் தமிழர்களுக்கான புனரமைப்பில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

விரைவில் தமிழர்கள் சுயநிர்ணய உரிமை பெற்றுத் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தர வேண்டும்.

உலக நாட்டு பிரதிநிதிகளும், பத்திரிகையாளர்களும், தொண்டு நிறுவனங்களும் அங்குள்ள தமிழர்களை நேரில் சந்திப்பதற்கு இது வரை இருந்து வந்த தடைகளை அகற்றுவதும் கூட இந்திய அரசின் பொறுப்புத் தான்.

இதற்கெல்லாம் இலங்கை அரசை உடன்பட வைக்கமுடியாது என்றால் இலங்கையோடு சேர்ந்து கொண்டு இத்தனை நாளும் 'இறையாண்மை' என்கின்ற பெயரால் இந்திய அரசு இரக்கமற்ற நாடகம்தான் ஆடிக் கொண்டு இருந்தது என்கிற பழிச்சொல் உறுதிப்பட்டு விடும் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ந-5)

---

## இலங்கை...

படை நடவடிக்கையின் வெற்றியை இந்தியா உட்பட 14 நாடுகள் பாராட்டி யுள்ளதுடன் இலங்கை மீது மேற் கொள் ளப்படும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களை முறியடிப்பதற்கும் அவை தயாராகி வருகின்றன.

இலங்கை மீதான விவாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் நாளை விவாதிக்கப்படவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 17 நாடுகளின் வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, சுலோவாக்கியா, சுலோவேனியா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளும் இந்த 17 நாடுகளில் அடங்கும்.

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராகவே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளன.


ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்கள் ஆகியவற்றின் வேண்டுகோள்களைப் புறக்கணித்ததுடன் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பு வலயத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களில் பெண்களும், சிறுவர்களும் அடங்குவார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

# தமிழக முதல்வர் கருணாநிதியுடன் நாராயணன் மீண்டும் நேற்று சந்திப்பு

## இலங்கை விவகாரம் குறித்து ஆராய்வு



(சென்னை)

முதல்வர் கருணாநிதியை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் இரண்டாவது நாளாக நேற்று சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையேயான போர் முடிவுக்கு வந்துள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளியுறவுத்துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் அண்மையில் கொழும்புக்கு பயணம் மேற்கொண்டனர்.

பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய நாராயணன் தமிழக முதல்வர் கருணாநிதியை சென்னையில் நேற்று முன்தினமிரவு சந்தித்து பேசினார்.

அப்போது இலங்கையில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகள், இலங்கைத் தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கான அரசியல்தீர்வுகள் ஆகியவை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேசிய விபரங்களை நாராயணன் கருணாநிதியிடம் விபரித்தார்.



பின்னர்நேற்றுக் காலை நாராயணன் மீண்டும் கருணாநிதியை சந்தித்து பேசினார். இச் சந்திப்பும் இலங்கை தமிழர் விவகாரம் தொடர்பாகவே அவர் கருணாநிதியை இரண்டாவது நாளாக சந்தித்து பேசினார் எனக் கூறப்படுகிறது. (ந-5)

# ஸ்ரீ.சு. கட்சியில் சேருமாறு டக்ளஸுக்கு மகிந்த அழைப்பு

(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளை அழித்து விட்ட நிலையில் தமிழர் தரப்பில் சிறிய கட்சிகள் எதுவும் தேவையில்லை எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து வட பகுதி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யுமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டதாகவும் தெரியவருகிறது. (ந-5)

# பிரபாகரன் இருப்பதாக கூறிய இளைஞன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் எனக்கூறிய தமிழ் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள நடைபாதை வியாபாரம் செய்யும் தமிழ் இளைஞன் ஒருவர் அங்கு நின்ற சிலரிடம் தலைவர் பிரபாகரன் இறக்கவில்லை என்றும் எவரும் பயப்பட வேண்டாம் எனவும் கூறியிருக்கின்றார்.

அப்போது அருகில் வியாபாரம் செய்து கொண்டிருந்த இளைஞன் ஒருவர் புறக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

உடனடியாக நடைபாதை வியாபாரம் அமைந்துள்ள இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்த குறித்த தமிழ் இளைஞனைக் கைது செய்தனர்.

அவர் தற்போது புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

(ந-5)

# முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மருத்துவப் பணியாற்ற வாருங்கள்

## தமிழ் டாக்டர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க தமிழ் பேசும் மருத்துவர்களை முன்வந்து உதவுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்து நலன்புரி நிலையங்களுக்குமான மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சுழற்சி முறையில் மருத்துவர்கள் குழு பணியாற்றச் செல்வதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் இப்பணியில் இணைந்து கொள்ளும் மருத்துவர்களுக்கான தங்கும் இடவசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் அனைத்தையும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஊடாக ஏற்பாடு செய்து தருவதற்கும் முடிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி பேசக் கூடிய மருத்துவர்களை கொண்டு மருத்துவ முகாம் ஒன்றை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் இம்முயற்சிக்கு மருத்துவர்கள் மனிதாபிமான அடிப்படையில் முன்வர வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளதுடன் எமது மக்கள் தற்போது எதிர் கொண்டிருக்கும் உணவு, உடை மற்றும் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வரும் அதேவேளை அவர்களின் மருத்துவத் தேவைகளைப் பொறுத்தவரையில் அதற்கு விசேட ஏற்பாடுகள் அவசியம் என்பதை தான் புரிந்து கொண்டுள்ளதாகவும் எனவே இம் மாபெரும் மனித நேயப் பணியில் அனைவரும் உணர்வோடும் அர்ப்பணிப்போடும் பணியாற்ற இணைந்து கொள்ளுமாறு தான் வேண்டுகோள் விடுப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

(ந)

# இன்று ஒரு தகவல்

## தூக்கமும் விழிப்பும்

இந்த உலகத்தில் தூங்கிக் கெட்டுப் போனவர்களும் உண்டு. தூங்காமல் கெட்டுப் போனவர்களும் உண்டு.

விழித்துக் கொண்டிருக்க வேண்டிய நேரத்தில் தூங்குவதும் தப்பு. தூங்க வேண்டிய நேரத்தில் விழித்துக் கொண்டிருப்பதும் தப்பு.

ஒரு கடைக்கு சாமான் வாங்கப் போகிறீர்கள். அங்கே உள்ள பையன் “கொஞ்சம் பொறுங்கள். முதலாளி தூங்கிக்கொண்டிருக்கிறார். முழித்துக்கொண்டதும் உங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு போகலாம். ” என்று சொன்னால் வியாபாரம் எப்படி நடக்கும்?

இரவு முழுவதும் விழித்திருந்து விட்டு காலையில் புறப்பட்டு நான் கார் ஓட்டிக்கொண்டு கன்யாகுமரிக்குப் போகிறேன் என்று சொன்னால், அவர் என்ன கன்யாகுமரிக்கா போவார்? வேறெங்கேயாவது போய்விடுவார்.

அமெரிக்காவில் நடந்த ஒரு ஆய்வின்படி,குறிப்பிட்ட சில நேரத்தில் தான் வீதி விபத்துக்கள் அதிகமாக நடக்கிறதாம். அதாவது, அதிகாலை 2 மணியிலிருந்து 7 மணிவரையும் மதியம் 2 மணியிலிருந்து 5 மணி வரையும் ஏன் இப்படி?

மனித உடம்பில் இந்த நேரங்களில் நரம்பு மண்டலங்களின் செயற்பாடு கொஞ்சம் குறைவாகவே இருக்குமாம். அதனால் இந்த சமயங்களில் எந்த வேலை செய்தாலும் கவனக்குறைவு இருக்கும். தீர்மானம் எடுக்கும் திறமையும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும்.

மேற்கு ஜேர்மனியில் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து சில தகவல்களை கூறியிருக்கிறார்கள். மதியவேளைகளில் உடம்பின் உஷ்ணம் கொஞ்சம் குறையுமாம். அதனால் அந்த நேரத்தில் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்வது நல்லது.

சரி... ஒரு மனிதன் எவ்வளவு நேரம் தூங்கவேண்டும் என்பதற்கும் ஒரு அளவு உண்டு. பிறந்த குழந்தைகள் 18 இலிருந்து 20 மணிநேரம் தூங்கவேண்டும். பாடசாலை போகும் பிள்ளைகள் 12 இலிருந்து 14 மணிநேரம் வரைக்கும் தூங்கவேண்டும்.

பெரியவர்கள் 7 இலிருந்து 9 மணிநேரம் தூங்க வேண்டும்.

நேரத்தைக் கூட நம் உடம்புக்கு சௌகரியமான முறையில் உபயோகப்படுத்திக் கொள்வதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கு “Chrono hygiene ” என்று பெயர்.

அதிகாலை நேரம். பஸ் ஒன்று வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அந்த பஸ்ஸில் தெய்வீக பிரச்சாரம் செய்யும் பெரியவரும் போய்க் கொண்டிருந்தார்.

திடீரென்று அந்த பஸ் ஒரு ஆற்றில் விழுந்து மூழ்கி விட்டது.

அந்த பஸ்ஸை ஓட்டியவர் சொர்க்கத்துக்குப் போய் விட்டார். அதில் போய்க்கொண்டிருந்த பெரியவர் நரகத்துக்குப் போய்விட்டார். ஏன் இப்படி என்று யாருக்கும் புரியவில்லை.

அந்தப் பெரியவரே பொறுக்க முடியாமல் கடவுளிடம் முறையிட்டார்.

“கடவுளே! இது என்ன அநியாயம்! நான் காலம் பூராகவும் ஜனங்களுக்கு தெய்வீக பிரச்சாரம் செய்து கொண்டிருந்தேன். என்னால் தான் பல பேர் உங்களை நினைக்கிறார்கள். அப்படி இருக்கும் போது என்னை நரகத்துக்கு அனுப்பிவிட்டீர்கள். அந்த ஆள் தண்ணி போட்டு விட்டு கண்ணை முழித்து வண்டியை ஓட்டி கவிழ்த்துவிட்டார். அவரை சொர்க்கத்துக்கு அனுப்பி விட்டீர்களே...” என்றார்.

அதற்குக் கடவுள் பதில் சொன்னார். அப்படியில்லை. நீ பிரசங்கம் செய்யும் போதெல்லாம் ஜனங்கள் கவலையே இல்லாமல் கண்ணைமூடி தூங்கிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் அந்த ஆள் வண்டி ஓட்டும் போதெல்லாம் அதில் பிரயாணம் செய்பவர்கள் அத்தனை பேரும் நல்ல விதமாகப் போய்ச்சேர வேண்டும் என்பதற்காக என்னையே பிரார்த்தனை செய்வார்கள்.

உன்னை விட அவர்தான் ஜனங்களுக்கு அடிக்கடி என் ஞாபகத்தை உண்டாக்கியவர். அதனால் தான் இப்படிச் செய்தேன்”

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஏ-9 பாதையைத் திறப்பதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி

## அமைச்சர் பீ.பீ.ஏக்கநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். கண்டி ஏ-9 வீதியை பொது மக்களின் பாவனைக்காக திறந்து விடுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பீ.பீ.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பாதையைத் திறப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஏ-9 நெடுஞ்சாலை புனரமைக்கப்பட்டுவிட்டது. தற்போது இராணுவ வாகனங்களும் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லும் லொறிகளும் இப் பாதை வழியாக பயணிக்கின்றன.

யாழ்.குடாநாட்டு மக்கள், இப் பாதை மூடப்பட்டிருப்பதால் கடந்த பல வருடங்களாக பெரும் போக்குவரத்து சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து அவசர தேவைகளுக்காக தென்பகுதிக்கு வருவோர் கப்பலையும் விமானத்தையும் நம்பி பல நாட்கள் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உள்ளது.

இம் மக்களின் கஷ்டங்களை போக்கும் வகையில் பாதையை உடனடியாக புனரமைக்குமாறு ஜனாதிபதி எனக்கு உத்தரவிட்டிருந்தார். ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பாதை புனரமைக்கப்பட்டு விட்டது. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவு கிடைத்தவுடன் பாதை திறக்கப்படும் எனத் தெரிவித்தார். (6)

# கிளிநொச்சி முல்லைத்தீவில் புதிய இராணுவத் தளங்கள்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடமிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வன்னிப் பிராந்தியத்தில் புதிய படைத் தலைமையகங்களை அமைப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைத் தமது சொந்த இடங்களுக்கு அனுமதிப்பதற்கு முன்னர் அந்தப் பகுதிகளில் இரண்டு புதிய பாதுகாப்புத் தலைமையகங்கள், இரண்டு விமானப் படைத்தளங்கள் மற்றும் புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கவிருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இரண்டு புதிய இராணுவக் கட்டளைத் தலைமையகங்கள் அமைக்கப்படவிருப்பதுடன், இரணைமடுவில் விடுதலைப் புலிகளின் விமான ஓடு தளத்தை விமானப் படையினர் தமது ஓடுதளமாக மாற்றவுள்ளனர்.

வவுனியாவிலுள்ள வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகத்துக்கு மேலதிகமாகப் புதிய தலைமையகங்கள் அமைக்கப்படவிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார ஆங்கில வார இதழொன்றுக்குத் தெரிவித்தார்.

அதேநேரம் , இரணைமடுவில் விடுதலைப்புலிகளின் விமான ஓடுதளம் அமைந்திருந்த பகுதி விரிவாக்கப்பட்டு விமானப்படையினரின் ஓடுதளம் அமைக்கப்படும் என விமானப் படைப் பேச்சாளர் ஜனக நாணயக்கார கூறியுள்ளார்.

தாக்குதல் விமானங்கள் இறங்கக் கூடியளவு விமானத்தளம் அமைக்கப்படும் எனவும், இரண்டாவது விமான ஓடு தளத்துடன் முல்லைத்தீவில் அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மற்றும் வட தெற்குக் கரையோரங்களை மையமாகக் கொண்டு கடற்படையினரும் புதிய தளங்களை அமைக்கவுள்ளனர்.

புதிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் சோதனை நிலையங்கள் அமைப்பதற்கு 50 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும் , கிளிநொச்சியில் பொலிஸ் தலைமையகம் அமைக்கப்படுமெனவும் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர். (6)

## மோதல்கள் இடம்பெற்ற பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் அவர்களை மீள்குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அனர்த்த நிவாரண மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதன்பொருட்டு மோதல்கள் இடம்பெற்ற பகுதியில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்தும்இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## இராசி பலன்

25.05.2009

(வைகாசி 11, திங்கட்கிழமை

பிரதமை பிற்பகல் 04.34 மணிவரை

ரோகிணி மாலை 6.11 மணிவரை

இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

சுபநேரம் 11.52-1.22 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனோ சங்கடம், பணவிரயம், முயற்சி தாமதம், கடின வார்த்தை. |
| இடபம் | வெகுமானம்,மாதர்நட்பு, போசன சுகம், உஷ்ணநிலை. |
| மிதுனம் | சோம்பல் நிலை,காரிய அலைச்சல், கௌரவக்குறைவு, தனவிரயம். |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி,தனதானிய சேர்க்கை, கலந்துரையாடல். |
| சிங்கம் | புதிய திருப்பம், மேன்மை,காரிய சித்தி, பெரியோரால் மதிக்கப் படுதல். |
| கன்னி | சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு,திடீர் பயணம். |
| துலாம் | மனச்சோர்வு ,காரியதமாதம் அபகீர்த்தி, போசன சுகம். |
| விருச்சிகம் | எடுத்தகாரியம் கைகூடும், மனோ தைரியம், தனலாபம், குடும்ப மகிழ்ச்சி. |
| தனுசு | நோய் குணமடைதல், சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், போசனசுகம். |
| மகரம் | அஜீரண ரோகம், முயற்சி தாமதம், மரியாதைக்குறைவு, தனவிரயம். |
| கும்பம் | தன்னம்பிக்கைக்குறைவு,வாகன சுகம்,தனலாபம், தொழில் ஆர்வம். |
| மீனம் | கூட்டுமுயற்சி, நற்கீர்த்தி, மனோ தைரியம்,தனவருவாய். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 55 |
| தக்காளி | 350 | 400 | 200 |
| அவரை | - | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 65 |
| கோவா | 60 | 80 | 65 |
| கரட் | 60 | 80 | 65 |
| பூசணி | 20 | 40 | 30-40 |
| புடோல் | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 55 |
| சின்ன வெங்காயம் | 50 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 55 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 180 | 200 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| போஞ்சி | - | - | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |
| கறிமிளகாய் | 100 | 110 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| முருங்கைக்காய் | 700 | 800 | 600 |

## தீவக வலயத்தின் ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில மொழித் திறன் போட்டிக்ள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பங்குபற்றும் பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்திற்கு வருகை தர வேண்டும் என ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கதிரேசபிள்ளை அறிவித்துள்ளார். (6-4)

### யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில்

## குடிசார் எந்திரவியல் டிப்ளோமா பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரியின் தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் பயிற்சி நெறிகள் பிரிவினால் நடத்தப்படும் குடிசார் எந்திரவியல், கணிய அளவையியல் டிப்ளோமா பயிற்சிநெறிகள் இம்மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதில் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் டிப்ளோமா,சந்தைப்படுத்தலில் உயர்தர டிப்ளோமா, கணக்கியல் உயர்தர டிப்ளோமா, வர்த்தகத்துறை ஆங்கிலத்தில் உயர்தர டிப்ளோமா, வாகன பொறியியல் தொழில்நுட்ப உயர்தர டிப்ளோமா, அலங்காரத்துறை டிப்ளோமா (பரதநாட்டியம்), மனையியல் டிப்ளோமா, உயிரி தொழில்நுட்ப டிப்ளோமா, நுண்ணுயிரியல் டிப்ளோமா, கடல்சார் உயிரியல் வள தொழில்நுட்ப உயர்தர டிப்ளோமா போன்ற கற்கை நெறிகளும் மைக்றோ சொப்ட் டிப்ளோமா, கணனி வன்பொருள் பொறியியல் சான்றிதழ்,முன்பள்ளிக் கற்கை நெறி டிப்ளோமா, ஆங்கில மொழித்திறன் சான்றிதழ், சிங்கள மொழி சான்றிதழ் போன்ற புதிய கற்கைநெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சியில் இணைந்துகொள்ள விரும்புவோர் தொழில்நுட்பக் கல்லூரியில் உள்ள அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்க்ளைப் பெற்று பதிவுசெய்து கொள்ளுமாறு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை — யூன் 5 இல் நடத்த ஏற்பாடு —

(யாழ்ப்பாணம்)

யாழ் .மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யூன் 5 ஆம் திகதி சமூக சேவைகள் அமைச்சரும் வடக்கு மாகாண விசேட செயலணி மற்றும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனதிராஜா வடக்கு மாகாண ஆளுநர் வடக்கு மாகாண பிரதம செயலாளர் , மாகாண அமைச்சின் செயலாள்ர்கள் மற்றும் யாழ். மாவட்ட திணைக்களத் தலைவர் ஆகியோருக்கு யாழ். மாவட்ட செயலாளர் க. கணேஷ் அழைப்பு விடுத்துள் ளார். இம் மாநாட்டில் யாழ்.மாவட்டத்தின் புணர் வாழ்வு புணர் நிர்மாணப் பணிகள் குறித்து விவாதிக்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)





உலக புவி தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவினரால் ZOA நிறுவனத்தின் அனுசரணையுடன் கருணாலயம் சிறுவர் இல்லத்தில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வுக் கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பதில் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் நாடா வெட்டி ஆரம் பித்துவைப்பதையும், விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். -(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

## மஹோற்சவம்

(கல்வயல்)

வடகோவை அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூன்மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10.30 ம்ணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (6-4-31)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூன் மாதம் 6 -ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (6-4)

### யாழ்.செய்திகள்

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

U.N.D.P நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட ''உங்கள் தொழிலை ஆரம்பித்து முன்னேற்றுங்கள்'' (SIYB) பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11.30 மணிக்கு பாண்டவெட்டை திருநாவுக்கரசு சனசமூக நிலையத்தில் சனசமூக நிலையத் தலைவர் நா.இராசேந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அலுவலர் ஆ.சபாநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்திணர்களாக சங்கானை ப.நோ.கூ. சங்கத் தலைவர் மா. சிவசுப்ரமணியம்,யாழ்ப்பாணம் U.N.D.P தலைமை அதிகாரி கே.வி.நிசாந்தன், வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

## — நல்லூர் கோட்ட மட்ட — ஆங்கில தினப்போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட ஆங்கிலதினப் போட்டியின் மேலும் சில முடிபுகள் கோடடக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**உறுப்பெழுத்து**

*தரம் -3*

எஸ்.மானமிர்தன்(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), கே.நேசல்யா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை),ரி. பானுசா- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை).

*தரம்-4*

ஏ.சோபிகா (சென் பெனடிக் றோ.க.த.க. பாடசாலை) எம்.திலக்சிகா(யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ரி.நிதர்சனா (சென் பெனடிக் றோ.க.த.க.பாடசாலை)

*தரம்-5*

ஆர்.சஜிமீரா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை),கே.தாரணி (கொக்குவில் ஸ்ரேசன் சி.சி.த.க.பாடசாலை), பி.திலக்சனா (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை)

*தரம்-6*

வை.வஜிகரன்(யாழ்.இந்துக் கல்லூரி), ரி:குவேனிகா- (கொக்குவில் இந்துக்கல்லூரி), ரி.கோபிகா(கோண்டாவில் இந்து மகாவித்தி.)

*தரம்-7*

எஸ்.அபித்ரா (யாழ். இந்து மகளிர் கல் லூரி, கே.விதுரா(கொக்குவில் இந்துக் கல்லூரி), எம். சியந்தினி (கோண்டாவில் இந்து மகாவித்தி.)

*தரம்-8*

வை.நிவேதிகா(கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ.ஹரிசங்கர்(யாழ்.இந்துக் கல்லூரி), ரி. அனுத்திகா- யாழ். இந்துமகளிர் கல்லூரி)

*தரம் 9*

எம்.சோபிதன்(யாழ்.இந்துக்கல்லூரி), ஜே. பிரதாபன்(யாழ்.இந்துக்கல்லூரி),எஸ். துர்க்காயினி (நல்லூரி இந்து தமிழ் பெண்கள் பாடசாலை).

*தரம்-10*

எஸ்.மிருணன்(கொக்குவில் இந்துக்கல்லூரி),ரி.ஆதவன்(யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.கோபிகா(யாழ். இந்து மகளிர் கல்லூரி)

*தரம்-11*

ஏ.பிரேமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.விதுஷா( கொக்குவில் இந்துக் கல்லூரி) வி.சேயன்(யாழ்.இந்துக்கல்லூரி)

*தரம் -12*

எஸ்.துளசிகா(கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.ஹேமா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.சரண்யா(யாழ். இந்து மகளிர் கல்லூரி).

*தரம் -13*

எஸ்.தீபிகா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ரி.நிருபா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கே. குணதீபன்( யாழ்.இந்துக் கல்லூரி)

**சொல்வதெழுதல்.**

*தரம் -6*

ஆர். சதுர்சன்(யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.ராகுலன்(யாழ்.இந்துக் கல்லூரி), என். டிலக்சேஸ்வரன்(கொக்குவில் இந்துக் கல்லூரி)

*தரம் -7*

ஜெ.லக்சுஜன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆர்.வித்தகன் ( யாழ்.இந்துக்கல்லூரி), கே. விதுரா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

*தரம் -8*

ரி.லக்ஸ்மன் (யாழ்.இந்துக்கல்லூரி) ,ஆர். சிவேஸ்வரன்(யாழ்.இந்துக் கல்லூரி), கே. அபிராம் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

*தரம் 9*

பி.குணவரன் (யாழ். இந்துக்கல்லூரி), எல்.வேனிகா(கொக்குவில் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் இருவர் ஜி. விசாகபவன்( யாழ். இந்துக்கல்லூரி),எம். ஆத்மிகா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

*தரம்-10*

இ.பார்த்தீபன் (யாழ்.இந்துக்கல்லூரி), ஏ.ஆரமுதன்(யாழ்.இந்துக்கல்லூரி), மூன்றாமிடம்இருவர் வி.ஜெயானி ( கொக்குவில் இந்துக்கல்லூரி),எம். கஜிந்தா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

*தரம்-11*

எஸ்.சர்மி(கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.சுஜீவன்(யாழ்.இந்துக்கல்லூரி), மூன்றாமிடம் இருவர் ஜே.திவ்யா (கொக்குவில் இந்துக்கல்லூரி), கே. பானுஜன் (யாழ். இந்துக் கல்லூரி).

*தரம்-12*

இ.கௌசிகன்(யாழ்.இந்துக்கல்லூரி), பி.சர்மிளா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ,ஆர். மைத்ரேயி(கொக்குவில் இந்துக் கல்லூரி)

*தரம் -13*

என்.நிரூபா(யாழ்.இந்துமகளிர் கல்லூரி), எஸ். சிவாஜினி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சி. ரகுநாதன்(யாழ்.இந்துக் கல்லூரி)

**எழுத்துருவாக்கம்**

*தரம்- 5*

எஸ்.இந்துஜன் (யாழ்.இந்துக் கல்லூரி). என்.செந்தூரன்(யாழ்.இந்துக் கல்லூரி). இ.கஜிஸ்ரன்(கொக்குவில்இந்துக் கல்லூரி).

*தரம்-7*

பி.மேசிகன்(யாழ்.இந்துக் கல்லூரி). எம்.கவிப்பிரியா(கொக்குவில் இந்துக் கல்லூரி). எஸ்.பராபரன்( யாழ்.இந்துக்கல்லூரி).

*தரம்- 8*

ரி.லக்ஸ்மன் (யாழ்.இந்துக்கல்லூரி) ,வை. தனுசியா( யாழ். இந்து மகளிர் கல்லூரி). எஸ்.சுபலக்ஸ்மி(யாழ்.இந்துமகளிர்கல்லூரி).

*தரம்- 9*

சி.வி.வினுசாந் (யாழ்.இந்துக்கல்லூரி). பி.குணவரன்(யாழ்.இந்துக் கல்லூரி), எம். ஆத்மிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

*தரம்- 10*

இ.பார்த்தீபன்(யாழ். இந்துக் கல்லூரி. ஆர்.பிரணவன் (யாழ்.இந்துக் கல்லூரி). எம்.எழினி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

*தரம்-11*

எஸ்.சர்மி (கொக்குவில் இந்துக் கல்லூரி). பி.நவலக்சனா (கொக்குவில் இந்துக் கல் லூரி). பி.சிந்துஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

*தரம்-12*

இ.கௌசிகன்(யாழ்.இந்துக்கல்லூரி) ஆர்.மைத்ரேயி (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஏ.சாம்பவி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

*தரம் -13*

ரி.கிருஷ்ணப்பிரியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.பிரதீபா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), எஸ். ஆர்த்திகா (கொக்குவில் இந்துக் கல்லூரி) (6-4)

# மொழி-இலக்கியம்-பண்பாடு 05

கி.மு. எட்டாம் நூற்றாண்டு முதல் சமஸ்கிருத இலக்கியங்கள் வளம்பெற்று விளங்கத் தொடங்கின. சமஸ்கிருத மொழியையொத்த பழமையுடைய மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது.கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் சங்க இலக்கியங்கள் எழுத்துருவம் பெற்றனவாக அமைகின்றன. இதற்கு முன்னர் அவை வாய்மொழி மரபாக இருந்தன. அன்று தொடக்கம் இன்று வரை இடையறாது தமிழ்மொழி இலக்கியம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அதன் வளர்ச்சிப் படிமுறை பின்வருமாறு அமைந்தது.

கி.மு 300-கி.பி.200 சங்க இலக்கியங்கள் (செய்யுள்), தொல்காப்பியம் (இலக்கணம்)

கி.பி.200-கி.பி 600 பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் (செய்யுள்), சிலப்பதிகாரம் (செய்யுளும் உரைநடையும்), மணிமேகலை காரைக்காலம்மையார், மூவாழ்வார்கள்(பக்தி இலக்கியத் தோற்றம்) , சமண- பௌத்த இலக்கி யங்கள்

கி.பி 600-கி.பி 900 சைவ, வைணவ பக்திப் பாடல்கள் பெருந்தேவனார் பாரத வெண்பா, நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம், இறையனார் களவியலுரை

கி.பி 900- கி.பி 1400 பெருங்காவியங்கள், புராணங்கள் அரசவை இலக்கியங்கள், இலக்கணநூல்கள், சித்தாந்தநூல்கள், உரைகள், சிற்றிலக்கியங்கள் (பிரபந்தங்கள்)

கி.பி 1400-கி.பி 1800 புராணங்கள், பிரபந்தங்கள், சித்தர் பாடல்கள், உரைநடைநூல்கள், தத்துவ சித்தாந்த நூல்கள், தனிப்பாடல்கள்.

கி.பி 1800 -இன்றுவரை கவிதை (மறுமலர்ச்சியடைதல்) , சிறுகதை, நாவல் வடிவங்கள், புதிய உரைநடை, பத்திரிகை, புதுக் கவிதை.

### இலக்கியமும் மொழியும்

மொழியின் ஒருவகைச் சிறப்புப் பயன்பாடே எல்லா வகையான இலக்கியங்களுமாகும்.அவை வாய்மொழி இலக்கியங்களாகவோ எழுத்து வழக்கில் அமைந்தனவாகவோ ஆகலாம். அவை பண்டைக் காலத்து அல்லது நவீன காலத்து இலக்கியங்களாகலாம். இலக்கியம் இல்லாமல் மொழியுண்டு.ஆனால் மொழியின்றி இலக்கியமே இருக்க முடியாது. கம்பனுடைய " தீஞ்சுவை செஞ்சொற் காவியின்பம்" என்னும் பாடலடி கவிதைக்குச் சொல்லின் இன்றியாமையை எடுத்துக்காட்டும். மொழியின் ஒருவகைச் சிறப்புப் பயன்பாடே இலக்கியம் என்று கூறப்படும்போது, ஒரு மொழியின் குறிப்பிட்ட சொற்றொகுதி அல்லது இலக்கணக்கூறுகள் இலக்கிய ஆக்கத்திற்கு உதவுகின்றன என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. மொழியின் எந்தவொரு பகுதியினையோ கூறினையோ இலக்கிய ஆக்கத்திற்கு ஏற்றதல்ல என்று தள்ளிவைக்க முடியாது. குறிப்பிட்ட மொழியின் சொற்றொகுதி,இலக்கண அமைப்புக்கள் ஆகியவற்றில் ஒரு வகையான சேர்க்கையே இலக்கியமெனக் கூறலாம். சாதாரண பேச்சுக்குரிய இச்சேர்க்கை வேறுபட்டதாகவே அமையும். இலக்கியப் படைப்பாளியாகிய கவிஞன் தன் கவிதைக்கு வேண்டிய மொழிப் பண்புகளைத் தெரிந்தெடுப்பது போலவே சாதாரண ஒரு மனிதனும் வரக்கியமொன்றினைப் பேசும் பொழுது மொழிப்புண்புகளைத் தெரிந்தெடுக்கிறான்.

ஆனால், கவிஞனுடைய தெரிவு ஒரு சிறப்பு நிலையில் நடைபெறுகிறது. நாம் பேசும் பொழுது வாக்கியங்களை அமைப்பது கருத்துத் தொடர்புக்காகவேயாகும்.வெறுங் கருத்துத் தொடர்புக்காக அல்லது செய்திக்காக அமைக்கப்படும் வாக்கியங்களில் சில வேளைகளில் வேகம், தன்மையழுத்தம், நளினம் ஆகியன அவசியமற்றனவாகலாம். ஆனால் கவிஞனோ எப்பொழுதும் இவற்றினைக் கொண்ட சொற் சேர்க்கைகளையே உண்டாக்குகிறான். நாம் வெறும் செய்திகளை மட்டும் அறிந்து கொள்ள வேண்டுமென்றால், கவிதையையோ இலக்கியத்தையோ நாட வேண்டிய அவசியமில்லை. அவற்றைக் கவிதை போன்ற இலக்கிய வடிவத்தாலன்றி, வேறு பல இலகுவான வழிகளிலே அறிய லாம். உதாரணமாக,செய்திப் பத்திரிகைக் கட்டுரைகள், செய்திகள் ஆகியன இத் தொண் டினை நன்கு செய்யும். எனவே கருத்துத் தொடர்புக்கு இன்றியமையாத மொழி, கவிதை வடிவெடுப்பது வெறும் செய்திக்காக மட்டுமல்ல.

### இலக்கியம் மொழியாக ஆராயப்பட்டது

ஒருகால இலக்கியத்துக்கு அக்கால மொழி வழக்கும் வரலாறும் உதவி வருகின்றன. இதனால் இலக்கியமென்பது மொழி வழக்கே என்று தான் விளக்கம் தொடுக்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலை பண்டைய இலக்கிய இலக்கண ஆசிரியரிடையே பல காலமாக நிலவி வந்துள்ளது.

இது அந்நிய மொழிகளுக்கும் ஐரோப்பிய மொழிகளுக்கு பொருந்தக் கூடியதாகும். பண்டைய அறிஞர்கள்,கலைஞர்கள் இலக்கியம் என்பது கவிஞனாலோ நாடகாசிரியனாலோ மொழியைச் சிறப்பு நிலையில் பயன்படுத்துவது என்றே கருதினர். கவிதையியல் என்பது அவர்களால் யாப்பியல் என்றே கருதப்பட்டது.சாதாரண மக்கள் பேசும் மொழியை விட இலக்கிய மொழியையும் அதன் இலக்கணத்தையும் அறிந்தவனே புலவன் எனக் கொள்ளப்பட்டான்.

இதனால், இலக்கண ஆசிரியர்கள், இலக்கியத்தைப் பகுத்துஉரை கூறவல்லவர்கள் ஆகியோருடைய சொத்தாகவே செய்யுளும் யாப்பும் கருதப்பட்டு வந்தன. மரபு வழி வந்த தமிழ் இலக்கண ஆசிரியர்களும் மேலைத்தேய இலக்கண ஆசிரியர்களும் மொழியாய்வு என்பது இலக்கிய விள்க்கம், மெய்யியல், அளவையியல் ஆகியற்றின் அடிபட்டதென்றே கருதினர்.



இலக்கியம் கண்டதற்கு இலக்கணங் கூறும் மரபு தமிழ் மொழியிலிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

எமது பண்டைய இலக்கணங்களும் மேலைத்தேய மரவுவழிபட்ட இலக்கணங்களும் எழுத்து வழக்குக்கே முக்கியத்துவம் கொடுத்தன. இதனால், எழுதப்பட்ட இலக்கியங்களுக்கு அல்லது இலக்கிய மொழிக்கே இலக்கணம் யாக்கப்படும் என்னும் மரபு தமிழிலே தோன்றியது. தொல்காப்பியருடைய இலக்கணம் சங்க இலக்கியங்களுக்கு

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**


முற்பட்டதெனக் கொள்ளும்போது, அவ்விலக்கணம் தோன்றுவதற்குக் காலாக அதன் முன்னரே பல இலக்கியங்கள் (அவை இப்போது கிடைக்காவிடினும்) தோன்றின என்று கூறுவதற்கு இம் மரபே காரணமாகின்றது. பனம்பாரனார் எழுதியது எனக் கூறப்படும் தொல்காப்பியர் பாயிரத்தில்,

"வடவேங்கடந் தென்னுமரி  
யாயிடைத்  
தமிழ்கூறு நல்லுலகத்து  
வழக்குஞ் செய்யுள மாயிரு முதலி  
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி.."

என்று கூறியது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

67



ஒபாமா பல மனிதரில் உள்ள பலவீனங்களைக் கண்டுள்ளார். தாத்தா, லோலோ போன்றவர்களிடமிருந்து தான் பெற்றது புறநிலைப் பாடங்களே. அவர்களை அவரால் அன்பு செய்ய முடிந்ததே தவிர பின்பற்ற முடியவில்லை. கறுப்பர்களில் ஒபாமா கண்ட நல்ல குணங்களையும் குறிகளையும் பொதியாக்கித் தன் தந்தையின் உருவத்துள் பதித்திருந்தார். கறுப்பர்களின் பலவீனங்களைக் கண்டு ஏமாற்றமடைந்த போது தந்தையின் உருவம் முன்னின்று தட்டிக் கொடுத்தது. தப்ப வைத்தது தவறு செய்யவொண்ணாது தடுத்தது.

"உன் முயற்சி போதாது பரி ! உனது மக்கள் கறுப்பர்களுக்கு -அவர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நீ உதவ வேண் டும்.

"எழுமின் விழிமின் -மகனே!  
எழுமின் விழிமின்  
குறியினைச் சேரும் வரையும் நீ  
அரைக்கணம் நில்லாது  
முன்னேறிச் செல்வாய் - உன்  
வாழ்வின் குறியே - ஆத்மதரிசனம்  
உந்தனில் உள்ளது அதற்கார்வம்  
துன்பம் தரும் இம்சை வாழ்வை  
புறந்தள்ளி முன்னேறுவாய்  
நானிந்த தேகம் எனும் அகம்பாவம்  
வலையில் வீழ்ந்துள்ளாய்  
அமர ஆத்மன் நீ  
அம்ருத புத்ரன் நீ  
ஆனந்த ரூபத்தின்  
பரிபூரணனும் நீ"

என்று கூறுவதுபோல அவரின் குரல் ஒபாமாவின் காதில் ஒலிக்கும்.

ஒபாமாவை விமான நிலையத்திற்குக் கூட்டிச் சென்ற போது அவள் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். தன் தந்தையின் கிராமமாகிய அலேகோவின் அழகான - அமைதியான இயற்கைக் காட்சிகள்.

இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் பாட்டியோடு பேசுவதுபோன்ற பிரமை - அவள் மனத்தில் எழுந்தன..அலேகோவிலுள்ள வளவில் ஒரு மாமரத்தின் கீழ்தான் கிழவனின் உடல் புதைக்கப்பட்டுள்ளது. நாங்கள் அங்கே போகவேண்டும் பரக்! அவரை அங்கே தான் காண வேண்டும்" என்று உணர்ச்சிவசப்பட்டவளாகக் கூறினாள்.

சிக்காகோ மாநகரசபைத் தலைவர் ஹரோல்ட் வாஷிங்டன் றோஜ்லாந்து வந்து அங்கு ஆரம்பிக்க இருக்கும் அவரின் தொழில் வாய்ப்பும் பயிற்சியும் வழங்கும் மையத்தை திறந்து வைக்கப் போகிறார்.

இதற்கான ஆயத்தங்களில் றவீக் என்ற இஸ்லாமியர் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். பல பிரமுகர்களின் பரிந்துரையின் காரணமாகத்தான் இந்த மையம் றவீக்கின் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் திறப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது.

அன்று அரசியல்வாதிகள், இரகசியப் பொலிஸ்காரர்கள் என்று ஒரு பெரிய கூட்டம் அந்தக் கட்டடத்தில் கூடிவிட்டது.எல்லோரும் ஆவலோடு ஹரோல்டின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

ஒபாமா,ஏஞ்சலா மற்றும் உவில் ஆகியோரை ஒருபக்கம் அழைத்து உஷார்ப்படுத்திக் கொண்டார். மாநகர முதல்வர் வந்ததும் அவரிடம் எப்படியோ பேசி நாங்கள் நடத்தப்போகும் பேரணிக்கு அவரை வரும்படியழைக்க வேண்டும். அத்துடன் நாங்கள் செய்யும் பணிகள் பற்றி அவருக்கு விளக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் செய்தார் ஒபாமா.

அந்தநேரம் எங்கும் ஒரே பரபரப்பேற்பட்டது.அதையடுத்து ஒரே அமைதி பெரிய ஆடம்பரக் கார் ஒன்றிலிருந்து முதல்வர் இறங்கினார். அவரைச் சுற்றிலும் காவல் துறையினர் சூழ்ந்து நின்றனர். கூட்டம் ஹரோல்ட்.. ஹரோல்ட் என்று ஆரவாரித்தது.அவர் மேடையை நோக்கி நடந்தார் . பலரைக் கடந்து சென்றவர் ஏஞ்சலாவின் முன்சடுதியாக நின்றார். 'செல்வி ரைடர்தானே' என்று கூறிக்கொண்டு அவளுக்கு மரியாதை செய்தார். 'உங்கள் பணிகள் அனைத்தையும்

**ஜம்பொன்**

பற்றிக் கேள்விப்பட்டேன். மிக்க மகிழ்ச்சி' என்று தொடர்ந்து பாராட்டியவாறு அவளுடன் நடந்தார். ஏஞ்சலா அங்கு நின்றவர்களை அவருக்கு ஒவ்வொருவராக அறிமுகம் செய்து வைத்தார். இந்தக் குழுவினர் ஆற்றிய பணிகளை பாராட்டிப் பேசினார்.

முதல்வர் நாடாவை வெட்டி மையத்தை திறந்துவைத்துவிட்டு கிளம்பிவிட்டார். எல்லாம் பதினைந்தே நிமிடங்கள் தான் எடுத்தன.

(தொடரும்)

# ஆப்கானில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 60 தலிபான்கள் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தென்பகுதி பயங்கரவாதிகளின் கோட்டையாகவும் போதைப் பொருள் உற்பத்தி மையமாகவும் உள்ளது. இங்கு இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 60 பயங்கரவாதிகள் பலியாகியுள்ளதாக அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அமெரிக்க இராணுவத்தினர் கூறியதாவது,

ஹெல்மண்ட் மாகாண தலைநகரான லக்ஷ்கர்காவில் இருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மர்ஜா பகுதி இங்கு ஆப்கான் மற்றும் அமெரிக்க கூட்டுப்படை நுழைந்து தாக்குதல் நடத்தியது. இதில் மொத்தம் 60 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர். ஆப்கான் தலைமையிலான படை மர்ஜா பகுதியில் நான்கு நாட்கள் நடத்திய தாக்குதலில் போதைப் பொருள் பதுக்கி வைக்கப்பட்ட மிகப் பெரிய மறைவிடத்தைக் கைப்பற்றினர். போதைப் பொருட்கள் குண்டு தயாரிக்கும் பொருட்கள் ஆயுதங்கள் மற்றும் போர்க் கருவிகள் போன்றவை அழிக்கப்பட்டன. இவ்வாறு அமெரிக்க இராணுவத்தினர் கூறினர்.

இதற்கிடையில் ஆப்கானில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினரால் கடந்த சில மாதங்களாக பாகிஸ்தானுக்குள் ஊடுரு வும் தலிபான்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக பாகிஸ்தான் இராணுவ தலைமை ஜெனரல் அஷ்பக் கயானி தெரிவித்ததை ஆப்கானில் உள்ள அமெரிக்க இராணுவ மேஜர் ஜெனரல் ஜெப்ரி ஸ்கால சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, பாகிஸ்தானில் இராணுவத்தினர் மற்றும் தலிபான்கள் இடையே நடக்கும் சண்டை வலு வடைந்து வருகிறது. இதை தொடர்ந்து இதங்கு முன் இல்லாத அளவு தற்போது பாகிஸ்தானுக்குள் அதிகளவு பயங்கர வாதிகள் ஊடுருவுகின்றனர். ஒபாமா நிர்வாகம் அல்கொய்தாவை தோற்கடித்து ஆப்கானில் நடக்கும் போரில் வெற்றி பெற பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் கூடாரங்களை அழிக்க வேண்டுமென அறிவித்தது.

கடந்த காலங்களில் பயங் கரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவி வந்தனர்.

ஆனால் தற்போது புதிய வளர்ச்சியாக ஆப்கானில் இருந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவுகின்றனர். இந்த ஊடுருவல் பாகிஸ்தா னில் தலிபான்கள்தங்கள்படையை வலுப்படுத்தும் திட்டத்தை உறுதிப்படுத்துகிறது இவ்வாறு மேஜர் ஜெனரல் ஜெப்ரி ஸ்காலசர் கூறினார். (6)

# இலங்கை தலைவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும்

## மலேசிய தமிழர்கள் வலியுறுத்தல்

(கோலாலம்பூர்)

தமிழ் மக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தி போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இலங்கைத் தலைவர்கள்மீது விசாரணை நடத்த வேண்டும் என மலேசிய தமிழர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மலேசிய இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சாமிவேலு கூறியதாவது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டை என்ற பெயரில் இலங்கையில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது இது போர்க் குற்றமாகும். இந்தக் குற்றத்தில் தொடர்புடைய இலங்கைத் தலைவர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசு, ஐ. நா. வில் தெரிவிக்கும் விஷ யங்களை யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

குறிப்பாக இலங்கை அரசின் இது போன்ற நடவடிக்கைகளுக்கு மலேசிய அரசு எந்த விதமான ஆதரவும்அளிக்கக்கூடாது. இதை



வலியுறுத்தி மலேசிய பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். மலேசியாவில் தமிழர்கள் அதிகளவில் வசிக்கின்றனர். அவர்களின் உணர்வுகளுக்கு மலேசிய அரசு மதிப்பளிக்க வேண்டும் இவ்வாறு சாமி வேலு கூறியுள்ளார். (6)

# நேபாள நாட்டில் புதிய பிரதமராக மாதவ் குமார் நேபாள் தெரிவு



(காத்மண்ட்)

நேபாளத்தின் புதிய பிரதமராக முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் மாதவ்குமார் நேபாள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக நேபாளத்தில் நிலவும் அரசியல் நெருக்கடி முடிபுக்கு வரவுள்ளது.

நேபாளத்தில் இராணுவ தளபதி ஜெனரல் ருக்மாங்கத் கதாவாலை பதவி நீக்கம் செய்ததில்அதிபர் ராம்பரன் யாதவிற்கும் பிரதமராக இருந்த மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டாவிற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக பிரசண்டா பதவி விலகினார். இதையடுத்து பிரதமர் பதவிக்கு முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் மாதவ் குமார் நேபால் மனு தாக்கல் செய்தார். அவரைத் தவிர வேறு யாரும் மனு தாக்கல் செய்யவில்லை. இந் நிலையில் புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கான கூட்டம் நேற்று முன்தினம் இக் கூட்டத்தில் 22 கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மாதவ் குமார் நேபாள் பெயரை பிரதமர் பதவிக்கு நேபாள காங்கிரஸ் தலைவர் கிரிஜா பிரசாத் கொய்ராலா முன் மொழிந்தார். சி.பி.என்.யு.எம்.எல்.தலைவர் ஜலானாத் கனாய் வழி மொழிந்தார். மதாவ்குமார் ஏகமனதாக பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். இது தொடர்பான முறையான அறிவிப்பு பின்னர் வெளியிடப்பட்டது. (6)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை JRS குடும்பத்தினதும்
JRS நிறுவன கிளிநொச்சி மாவட்ட
இணைப்பாளருமான
**மறைபணிமரியாம்பிள்ளை**
**ததேயூஸ் சரத்ஜீவன்**
அடிகளாரது மரணச் செய்தி கேட்டு
ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அருட்தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் தாய்,
சகோதரர், சகோதரிகள் மற்றும் உறவுகள் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத் தினைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அருட்தந்தையின் ஆன்ம
இளைப் பாற்றிக்காக இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

JRS குடும்பம்
இலங்கை.


# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

## ஆரம்பம் : 01.06.2009

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பின்வரும் பயிற்சி நெறிகள் மாலை நேரத்தில் ஆரம்பமாகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| A. ADVANCED IN COMPUTER PROGRAMMING | DURATOIN 8 MONTHS |
| B. DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATOIN 4 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATOIN 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATOIN 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATOIN 4 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L | DURATOIN 3 MONTHS |
| G. INTERNET & E-MAIL | DURATOIN 1 MONTHS |
| H. DIPLOMA IN WEB MULTIMEDIA | DURATOIN 4 MONTHS |
| I. DIPLOMA IN SOFTWARE ENGINEERING | DURATOIN 6 MONTHS |
| J. DIPLOMA IN MICRO MEDIA | DURATOIN 4 MONTHS |
| K. PROFESSIONAL DIPLOMA IN GRAPHIC DESIGN | DURATOIN 6 MONTHS |
| L.COMPUTER HARDWARE TECHNOLOGY | DURATOIN 4 MONTHS |
| M.GENERAL INFORMATION TECHNOLOGY(GIT) | DURATOIN 6 MONTHS |
| N. INFORMATION &COMMUNICATION TECHNOLOGY (ICT) | DURATOIN 4 MONTHS |
| O.CHILD KIDS | DURATOIN 4 MONTHS |

## CERTIFICATE COURSES

| | | | |
|---|---|---|---|
| 1. MSWORD | - | 2007 XP | 9. ADOBE PHOTOSHOP |
| 2. MS EXCEL | - | 2007 XP | 10. PAGE MAKER |
| 3. MS ACCESS | - | 2007 XP | 11. FLASH |
| 4. MS POWER POINT | - | 2007 XP | 12. QUICK BOOK |
| 5. VISUAL BASIC | | | 13. ACC PACK |
| 6. JAVA, | | | 14. PRINT SHOPE DE LUXE |
| 7. JAVASCRIPT | | | 15.COREL DRAW |
| 8. MYOB | | | |

## EACH 3 MONTHS

### குறிப்பு

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டிபங்குக் குருவானவரின் (Parish priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக்கட்டணத்தில்சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## மேலதிக விபரங்களுக்கு:

REGISTRAR,
*PATRICIAN INSTITUTE*
61 (59) St. PATRICK'S ROAD, JAFFNA.
TP.NO 021 222 6148 Fax : 021 222 6148 E-Mail : Spitte@Sltnet.lk

## எழுதவும், வாசிக்கவும் தெரியாத மாபெரும் குறை

# வீறுகொண்ட யாழ். கல்வி வலயம் வெற்றி வாகை சூடுகிறது!

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களம்



யதார்த்த பூர்வமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பிரபல்யமான பாடசாலை மாணவர்களின் உயர்ந்த பெறுபேறுகளை தூக்கி நிறுத்தி புகழ்பாடும் இன்றைய காலகட்டத்தில், பின் தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பற்றிச் சதா சிந்திக்கும் சான்றாண்மை யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் இதயத் துடிப்பாக உள்ளது.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் ஈடுபாட்டுடன் கூடிய கல்விச் செயற்பாட்டு அறிமுகம் பின்தங்கிய பாடசாலைகளை விழிப் புணர்வடைய வைத்துள்ளதெனலாம்.

அவரின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட "வெற்றிக்கு வழி" என்ற குறுந்திரைப் படம் ஏழை மாணவி ஒருவரின் கல்வி ஏற்றத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது. குறுந்திரைப்படத்தைப் பார்க்க வைத்து பெற்றோர்களையும் மாணவர்களையும் விழிப்படைய வைத்த யாழ். கல்வித் திணைக்களம் அந்த விழிப்பினூடு பெற்றோர்களையும் மாணவர்களையும் கல்வி வலைக்குள் அகப்படுத்திக்கொண்டது.

தரமான கல்வித் தினம், கல்வி அபிவிருத்திப்பாதை, செயற்பாட்டுப் பாசறைகள் என்ற நீண்ட பட்டியலில் "வாசிப்பு முகாம்" என்ற புதிய எண்ணக்கரு கல்விப் பணிப்பாளரின் சிந்தனைப்படைப்பாகியது.

காலாகாலமாக எங்கள் மாணவர் மத்தியில் நிலவிய வாசிக்கவும், எழுதவும் தெரியாத மாபெரும் குறைபாட்டைத் தகர்த்தெறியும் பணி வாசிப்பு முகாமிடம் ஒப்படைக்கப்பட்டது. மாணவர்களிடம் எந்தக் குறைபாடு இருக்கக்கூடாதோ அந்தக் குறைபாட்டை பௌவ்யமாக மறைத்து வெறுமைச் சான்றிதழுடன் அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்த மிகப் பெரும் பாவ வரலாறுகளே எம்மிடம் உண்டு.

வாசிக்கவும், எழுதவும் தெரியாத மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்த பெருமை யாழ்ப்பாண கல்வி வலயத்தையே சாரும். கல்விப்பணிப்பாளரின் வழிகாட்டலில் வீறுநடைபோடும் வாசிப்பு முகாம் தமிழ்த்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன், ஆசிரிய ஆலோசகர்களான எஸ். தயாபரன், திருமதி கௌரி முகுந்தன், மற்றும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்புடன் கூடிய பணியினால் வெற்றி வாகை சூடுகிறது.

இடை நிலை வகுப்புகளில் வாசிக்க, எழுதத் தெரியாத மாணவர்கள் இனங்காணப்பட்டு உரியவாறு அவர்களின் குறை களையப்படுகிறது. கூடவே அந்த மாணவர்களை வாசிக்க, எழுதவைக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ். வலயத்தின் இந்த அதிரடி நடவடிக்கையால் ஆனந்தமடைந்த மாணவர்கள் ஏராளம். இதில் அதிசயமும் ஆச்சரியமும் என்னவென்றால், வாசிக்கவும், எழுதவும் தெரியாத மாணவர்களுக்கு எழுத்துப் பொறிமுறைகளைப் பயன்படுத்தும் நுட்பம் காட்டிக்கொடுக்கப்பட்டு, விசேடமாக கண்காணிக்கப்பட்டதன் விளைவு, அவர்கள் ஏனைய மாணவர்களை விட மிக வேகமாகவும், தெளிவாகவும் வாசித்தார்கள், எழுதினார்கள். அதுமட்டுமன்றி தமிழ், கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்களிலும் அவர்களின் அடைவு அதிகரித்துள்ளது.

### கண்டறியப்பட்ட காரணம்

வாசிக்கவும், எழுதவும் தெரியாத மாணவர்களிடம் க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது எத்துணை தவறு.

ஒழுங்காக வாசிக்கவும், எழுதவும் முடியாத மாணவர்களால் வினாக்களை விளங்கிக்கொள்வதும் அதற்குரிய விடை தெரிந்தாலும் அதனை உரிய மொழி நடையில் எழுதுவதும் எப்படி? இந்த மாபெரும் குறைபாட்டை



எங்களுக்குள் மூடி மறைத்துக்கொண்டு உச்சமான பெறுபேற்றைத் தேட முனைந்தது எத்துணை தவறு.

பின் தங்கிய பாடசாலைகளில் மாணவர்களின் அடைவு மட்டம் வீழ்ச்சி நிலையில் இருப்பதற்கு மூலகாரணம் அந்த மாணவர்களின் வாசிப்பு மற்றும் எழுத்தறிவு என்பவற்றில் இருக்கக்கூடிய பாதகமான நிலை என்ற உண்மை இப்போது கண்டறியப்பட்டுள்ளது- பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது.

### இலக்கு நிச்சயம்

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரினால் முன்னெடுக்கப்படும் வாசிப்பு முகாம் மூலை முடுக்கெங்கும் உள்ள ஏழை மாணவர்களுக்கு, பின்தங்கிய பிள்ளைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

வாசிப்பு முகாம் தொடர்பில் கடந்த 19ஆம் திகதி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் தலைமையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

தமிழ்த்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன், பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன், ஆசிரிய ஆலோசகர்கள் எஸ். தயாபரன், திருமதி கௌரி முகுந்தன், ஆசிரியர்கள் செல்வி வாசுகி பஞ்சாட்சரம், திருமதி ப.தியாகலிங்கம், ப.தினேஷ் மற்றும் பெற்றோர் பிரதிநிதிகள், வாசிப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் கருத்துரை வாசிப்பு முகாம் செயற்றிட்டத்தின் விளக்கமாக அமைந்தது.-

எட்டாம், ஒன்பதாம் வகுப்புகளில் கூட ஒழுங்காக வாசிக்கவும், பிழையற எழுதவும் முடியாத நிலை இருந்தது என்றால் அது குறித்துக் கவலைப்படாமல் இருந்து விட முடியாது.

எங்கள் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முதலில் இனங்காண வேண்டும். எழுதப்பட்ட யாப்புகளுடனும், புத்தகங்களில் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகளுடனும் போராடுவதை விடுத்து, எங்கள் மாணவர்களிடம் இருக்கக்கூடிய பலவீனம் என்னவென்பதை அறிவதே எங்கள் இலக்கை அடைவதற்கான வழியாகும்.

இவ்வாறு குறிப்பிட்டார் யாழ்ப்பாண வலயக் கல் விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள்.

க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் பின்னடைவாக இருப்பதற்கான காரணத்தில் எழுத, வாசிக்கத் தெரியாத குறைபாடே மிகப் பெரும் வகிபங்காகவுள்ளது.

5E முறையில் கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதென்பது எல்லா மாணவர்களும் பூரணமாக எழுதவும், வாசிகக்வும் தெரிந்த நிலையிலேயே வெற்றி தரும். ஆனால் எங்கள் மத்தியில் வாசிக்கவும் எழுதவும் தெரியாத மாணவர்கள் இருக்கின்றார்கள். எனவே அவர்களிடம் இருக்கக்கூடிய இந்தக் குறைபாட்டை நிவர்த்திப்பதற்காக "வாசிப்பு முகாம்" திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி இடை நிலை வகுப்புக்களில் உள்ள எல்லா மாணவர்களும் எழுதவும், வாசிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். இந்த இலக்கை நோக்கி எங்கள் "வாசிப்பு முகாம்" முன்னேறுகிறது. 75 வீதம் வெற்றி கண்டுள்ளது.

**விதுரன்**

ஆகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் எங்கள் இலக்கை வெற்றிகரமாக அடைந்து விடுவோம். தமிழ் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வழங்கி வரும் ஒத்துழைப்பினால் வாசிக்க, எழுதத்தெரியாத மாணவர்களின் மனக் கவலையை மாற்றி விடுவோம் என்றார் கல்விப்பணிப்பாளர்.

நீண்ட காலம் சந்தித்த பிரச்சினை – சந்ததி சந்ததியாக விடப்பட்ட தவறு. பரீட்சைப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கு இதுவே காரணம் என்பது யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தின் தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசனின் கருத்து.

இந்த மாபெரும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தமிழ் ஆசிரியர்களுடன் சந்திப்பு நடத்தப்பட்டது.

எழுதவாசிக்கத் தெரியாத மாணவர்களைத் தெரிந்தெடுத்து ஒவ்வொரு ஆசிரியர்களிடமும் அவர்களை ஒப்படைத்துள்ளோம். அதன் பயனாக மாணவர்கள் பலர் நன்மை அடைந்துள்ளனர்.

தங்கள் பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் விட்டனர். எங்கள் கல்விப் பணிப்பாளருக்கு அவர்கள் தங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

எங்கள் இலக்கு 100வீதம் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம் என உறுதிபடக் கூறினார் திருமதி மீரா அருள்நேசன்.

ஒவ்வொரு நாளையும் சர்வதேச தினங்கள் ஆக்கிரமித்துள்ள இவ் வேளையில், 2009 ஆகஸ்ட் முதலாம் திகதி வாசிக்கவும், எழுதவும் தெரியாத நிலையை இல்லா




## 2009 ஆகஸ்ட் ஒன்று பிரகடனம் கல்வி மேம்பாட்டில் சாதனை படைக்கும்

தொழிக்கும் திட்டத்தின் எல்லை நாளாக பிரகடனப்படுத்தி அதன் வெற்றிக்காக பாசறைகள், பயிற்சிகள், பெற்றோர் சந்திப்புக்கள், ஆசிரியர்களின் அயராத முயற்சிகள் என்ற பல்பரிமான நடவடிக்கையில் யாழ். வலயக் கல்வித்திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரதும் மகத்தான பணி இறைவனால் ஆசீர்வதிக்கப்படும்.

# அதிகாரப் பகிர்விற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது

## ஜே.வி.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

அதிகாரப் பகிர்விற்கு ஒருபோதும் இடம ளிக்கப்பட மாட்டாதென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநா யக்க தெரிவித்துள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டமூல அமுலாக்கலின் மூலம் படைவீரர் களின் உயிர்த் தியாகங்கள் உதாசீனப்படுத் தப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதிகாரப் பகிர்வின் மூலம் யுத்த வெற்றிகளை திசை திருப்பும் நோக்கங்களுக்கு தமது கட்சி ஒருபோதும் இடமளிக்காதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வு நடவடிக்கைகளுக்கு எதிராக ஜே.வி.பி கடுமையான நடவடிக்கை எடுக்க ஒருபோதும் பின்நிற்காதெனவும் ஒரே இலங்கைக்குள் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே புத்திசாதுரியமான நடவடிக்கையாக அமையும் எனவும் அவர் குறிபிட்டுள்ளார். (6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற வலிகாம கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -09.05.2009

## சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி




840




845

## கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி





849




850

# பிரபாகரனின் குடும்ப உறுப்பினர்கள் உயிருடன் இருக்கக் கூடும்

## ஹெகலிய தெரிவிப்பு



பிரபாகரனின் குடும்ப உறுப்பினர்கள் உயிருடன் இருக்கக் கூடுமென அரசாங்கப் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மனைவி பிள்ளைகளது சடலங்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வலயத்தில் உயிரிழந்தவர்களது சடலங்களை அடையாளம் காணும் பணிகள் தொடர்வதாக குறிப்பிட்ட அவர் பிரபாகரனின் மனைவி மற்றும் மக்கள் வெளி நாடொன்றுக்கு தப்பிச் சென்றிருக்கக் கூடுமென தாம் நம்புவதாக வும் தெரிவித்தார்.

இதேவேளை பிரபாகரனது உயிரிழப்பு குறித்து சந்தேகம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவரது உயிரிழப்பு உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாகவும் சட்டத் தேவைகள் ஏற்பட்டால் மரபணு பரிசோதனைகளை நடாத்த அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் பிரபாகரனின் சடலம் எரிக்கப்பட்ட போதிலும் மரபணு பரிசோதனைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை மற்றுமொரு இலங்கை ஊடகத்தில் பிரபாகரனின் மரபணு பரிசோதனை அநாவசியமானதென இராணுவப் பேச்சாளர் செவ்வியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# முகாம்களிலிருந்து இளைஞர்களை வெளியேற்ற மனித நேய அமைப்புகள் உதவி

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்நாட்டில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை அனுமதியின்றி முகாம்களிலிருந்து வெளியே அழைத்துச்செல்லும் நடவடிக்கைகள் நடப்பதாலேயே முகாம்களுக்கான அனுமதியைக் கட்டுப்படுத்தியிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ரஜீவ விஜயசிங்க கூறியுள்ளார்.

குறிப்பிட்ட சில அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் முறையிட்டிருப்பதாகவும் அதனைத் தொடர்ந்தே இந்த விடயத்தில் அரசாங்கம் உறுதியான நடவடிக்கையொன்றை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும் முகாம்களை சரியான முறையில் கையாளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் நோக்கிலேயே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பல வாகனங்கள் முகாம்களுக்குள் சென்று வரும் போது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது கடினமாகவுள்ளது என்றும் பேராசியர் ரஜீவ விஜயசிங்க கூறினார்.

இதேவேளை முகாம்களிலுள்ளவர்கள் அனுமதியின்றி அழைத்து வரப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லையென மனிதநேய அமைப்புக்களின் இணையத்தின் தலைவர் ஜீவன் தியாகராஜா கூறியுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் முகாம்களுக்குள் செல்லத் தடை விதிக்கப்பட்டாலும் மனிதநேய அமைப்புக்கள் முகாம்களுக்குள் சென்று தமது சேவைகளைத் தொடர்ந்தும் வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார். (6)

# டெங்கு பரவுவதைத் தடுக்க 20 வைத்தியர்களுக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

இலங்கையில் டெங்குநோய் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக 20 வைத்தியர்களுக்கு விசேட பயிற்சியொன்றை வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பயிற்சிகள் முடித்தபின்னர் இந்த வைத்தியர்களைப் பயன்படுத்தி மேலுமொரு செயற்குழுவுக்கு பயிற்சிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோயாளிகளை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றம் செய்தல், இரவில் இரசாயன பரிசோதனை மேற்கொள்ளல், அவசர தேவைகளின் போது இரசாயன பரிசோதனை நிபுணர்களின்சேவையைப் பெற்றுக்கொள்ளல், நோயின் தன்மைகளை அறிந்துகொள்ளல் போன்ற விடயங்களில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இதுவரை 5ஆயிரத்து 201 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 70பேர் மரணித்துள்ளனர் எனசுகாதார அமைச்சின் டெங்கு நோய் தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-6)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்
என்ற
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை

– *திருவள்ளுவர்*

வலம்புரி

## வன்னியில் இறந்தவர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக மகா யாகம் நடத்தப்படவேண்டும்

வையகத்தில் இறந்தவர்கள் தொடர்பில் கிரியை வழிபாடுகள் நடத்தும் முறைமை உண்டு.

இம் முறைமையில் தமிழ் மக்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள்.குறிப்பாக மறு பிறப்புக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் இந்து சமயம் ஆத்ம ஈடேற்றம் தொடர்பிலான பூசை வழிபாடுகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றது.

இதே நிலை மறு பிறப்புக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத கத்தோலிக்க மதத்திலும் உண்டு.

ஆத்ம இளைப்பாற்றலுக்காக இறந்தவரின் உடலைத் தேவாலயத்தில் வைத்து இறைவனிடம் ஒப்படைப்பதான நம்பிக்கையுடன் கூடிய பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன.

இவ்விதம் இறந்தவர் தொடர்பில் பௌத்தம் மற்றும் இஸ்லாம் மதங்களும் இறைவழிபாட்டை வலியுறுத்துகின்றன.

இறந்தவர்களுக்கான அபரக் கிரியைகள் உரியவாறு நடத்தப்படவில்லையாயின்,அந்த ஆத்மாக்கள் சாந்தியடைய மாட்டாதெனவும், அவை பூலோகத்தில் உள்ள தங்கள் உறவுகளை பிரிந்த வேதனையில் அல்லற்படும் என்பதும் இந்து மதத்தின் கருத்து.

இதனாலேயே இல்வாழ்வானின் கடமைகளில் ‘தென்புலத்தார்’ எனக் கூறப்படும் இறந்தவர்கள் தொடர்பான பிதிர்க்கடனை திருக்குறள் தந்த வள்ளுவப் பெருமான் வலியுறுத்துகின்றார்.

எனவே ஆத்ம ஈடேற்றப் பூசை வழிபாடுகள் ஏற்புடையவை.அவை இறந்தவரையும் இழப்பினால் துன்புறுவோரையும் ஆற்றுப்படுத்தி ஆறுதலடைய வைக்கின்றன.

ஆகவே இது விடயத்தில் நாம் கவனிப்பற்றவர்களாக இருந்துவிட முடியாது.

அதாவது வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த மிகக் கொடூரமான யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்து விட்டனர்.

பலநூறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உறவுகள் எவருமின்றி உயிரிழந்து போயினர்.

அதேசமயம் இறந்துபோன தமது உறவுகளுக்காக எந்தக் கிரியையும் செய்ய முடியாதவாறு இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் முகாம்களில் அடைபட்டுள்ளனர்.

ஆகவே இறந்தவர்கள் தொடர்பில் பூசை வழிபாடுகளை பொதுவில் நடத்தவேண்டிய கடமைப்பாடு எம் அனைவருக்கும் உண்டு.

இந்து சமயம் சார்ந்தவர்களுக்காக நல்லை ஆதீன சுவாமிகளின் தலைமையில் இந்து அமைப்புக்களின் ஒன்றியம் ஆத்ம ஈடேற்றத்திற்கான மகாயாக பூசை வழிபாடுகளை செய்ய வேண்டும்.

நீண்ட கொடூர யுத்தத்தில் அந்தணர்களும், சிவாச்சாரியர்களும் அருட் தந்தையர்களும் இறந்துள்ளனர்.

அந்தணர்களின் உயிர்ப்பறிப்பு பிரம்மகத்தி தோஷத்தை ஏற்படுத்தும் என வேதங்கள் கூறுகின்றன.

ஆகவே யாழ்ப்பாண மண்ணில் உள்ள அத்தனை அந்தணச் சிவாச்சாரியர்களும், சைவ குருமாரும் இணைந்து இந்த மகாயாகத்தை நடத்துவது சாலச்சிறப்புடையது.

இதேபோல் கத்தோலிக்க மதம் சார்ந்து யாழ். மறைமாவட்ட ஆயர் தலைமையில், அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் அனைவரும் இணைந்து யாழ் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கும்பூசை வழிபாடுகளை ஆற்றவேண்டும்.

இதுவே யுத்தத்தில் இறந்தவர்களுக்காக நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

# இலங்கை அரசின் கோரிக்கைக்கு மலேசியா ஆதரவு அளிக்கக்கூடாது

(கோலாலம்பூர்)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் எதுவும் தலையிடக் கூடாது என ஐ.நாவைக் கோருவதற்காக கொழும்பு தயாரித்துள்ள நகல் யோசனைக்கு மலேசிய அரசாங்கம் ஆதரவளிக்கக் கூடாது என அந்த நாட்டில் முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவரான டத்தோ சிறி எஸ்.சாமிவேலு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மலேசியப் பிரதமர் நஜீப் ராசாக்குக்கு அனுப்பி வைத்துள்ள அவசர வேண்டுகோள் ஒன்றிலேயே இதனைத் தான் வலியுறுத்தியிருப்பதாக சாமிவேலு தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் 18 இலட்சம் இந்தியர்கள் இருக்கின்றனர். இதில் 14 இலட்சம் பேர் தமிழர்கள் எனவும் சுட்டிக்காட்டி யிருக்கும் அவர் , இந்த நிலையில் அவர்களின் உணர்வுகள் மதிக்கப் படவேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட போரில் தமிழ் சமூகத்திற்கு எதிரானகுற்றங்களைப் புரிந்தவர்கள் விசாரணைக்கு உள்ளாக்கப்படவேண்டும்.

சிறிலங்காப் படையினர் இனப்படுகொலை ஒன்றைச் செய்துள்ளனர்.அதற்குரிய தண்டனைஅவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படவேண்டும்.

வன்னியில் இடம்பெற்ற போரின் போது படையினர் மேற்கொண்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பாக ஜெனீவாவில் நாளை தொடங்கவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் ஆராயப்படவிருக்கும் பின்னணியில் இதற்கு எதிரான காய் நகர்த்தலொன்றை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது.

இதன்படி ஒருநாட்டின் உள் விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிடமுடியாது என்பதை வலியுறுத்தும் யோசனை ஒன்றை இந்தக் கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.இதற்கு மலேசியா உட்பட 12 நாடுகள் ஆதரவைத் தெரிவித்திருப்பதாகவும் இந்தப் பின்னணியிலேயே இதற்கு மலேசியா ஆதரவளிக்கக் கூடாது என அந்த நாட்டின் முக்கிய அரசி யல் தலைவர்களில் ஒருவரான டத்தோ சாமிவேலு தெரிவித்திருக்கின்றார். (ந–5)

# தமிழ் மக்களை திருப்திப்படுத்தக்கூடிய தீர்வுத் திட்டமொன்று அவசியம்

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

மோதல்கள் முடிவடைந்திருக்கும் நிலையில் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும் தீர்வுத்திட்டமொன்று முன்வைக் கப்படுவது அவசியம் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டுமென கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதிஎஸ். ஜ.கீத பொன்கலன் தெரிவித்துள்ளார்

13 ஆவது திருத்தச் சட்டம் அரசியல் தீர்வுக்கான அடிப்படையாக இருக்குமென நான் கருதவில்லை. தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய அவர்களின் ஆட்புல ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தக்கூடிய தீர்வுத்திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்கவேண்டும் என அவர் கூறினார்.

தமிழ் கட்சிகளுடன் இணைந்து இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வுத்திட்டமொன்றைத்தயாரித்து அதனைத் தமிழ் மக்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தமிழ் சமூகம் அதனைப் பரிசீலிக்க வேண்டுமெனவும் கலாநிதி கீத பொன்கலன் கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் புதிய கட்டமைப்பொன்று தேவை . அதில் எந்த சந்தேகமும் இல்லை. நான் நினைக்கிறேன். நாடு முழுவதற்கும் புதிய கட்டமைப்பொன்று அவசியம் .நாட்டிலுள்ள அனைத்து மக்களும் நன்மையடையக்கூடியதாக அப்புதிய கட்டமைப்பு அமையவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

முன்னர் தமிழ் சமூகம் அரசியல் தீர்வு விடயத்தில் பிரதான பங்காற்ற முடியாத நிலையிருந்தது . ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறியுள்ளது . இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ் சமூகம் சரியாகப் பயன்படுத்தவேண்டும் எனவும் அவர் அந்த ஊடகத்திடம் தெரிவித்தார். (6)

## விளையாட்டு உபகரணங்கள் வெளியீடும் சுய கற்றலுக்கான இறுவட்டு வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விஞ்ஞான மன்றத்தின் கணித விளையாட்டு உபகரணங்கள் வெளியீடும் இடை நிலைப்பிரிவு மாணவர்களுக்கான **கணித சுய கற்றலுக்கான** இறுவட்டு வெளியீடும் நாளை செவ்வாய்க் கிழமை பி.ப.1 மணிக்கு கல்லூரி கலையரங்கத்தில் மன்றத் தலைவர் செல்வன் ச.தனுசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் சங்க உப தலைவர் டாக்டர் லயன் வை. தியாகராஜா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (கணிதம்) எஸ்.வி.மகேந்திரன், இ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனம் உரிமையாளர் எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(6-4)

## அகில இலங்கை சைவநெறித் தேர்வும் தமிழ்மொழி முன்னோடிப் பரீட்சையும்

(அல்வாய்)

சைவ பரிபாலன சபையினால் அகில இலங்கை சைவ நெறித் தேர்வுடன் தரம் 9,10,11 மாணவர்களுக்கான தமிழ் மொழி முன்னோடி பரீட்சையும் இம்முறை நடத்தப்படவுள்ளது.

இதில் தமிழ்மொழிப் பரீட்சை நவம்பர் 6ஆம் திகதியும், சைவநெறித்தேர்வு நவம்பர் 7ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இத்தேர்வுக்கான காசுக்கட்டணமாக தரம் 2 முதல் 5வரை 15 ரூபாவும், தரம் 6முதல் 8 வரை 25 ரூபாவும், தரம் 9 முதல் 11 வரை 30 ரூபாவும் , தரம்12க்கு 40 ரூபாவும் , தமிழ்மொழி முன்னோடிப்பரீட்சைக்கு 30 ரூபாவும் செலுத்தப் பட வேண்டும் என தேர்வுச் செயலாளர் இரா. செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

மேலும் புதிதாக விண்ணப்பிக்கவுள்ளோர் *இல 66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்* எனும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6,4,19)

## மண்டைதீவில் சங்காபிஷேகம்

(மண்டை தீவு)

மண்டைதீவு தெற்கு திடுதிருக்கை ஞான வைரவப் பெருமானின் வருடாந்த சங்காபிஷேகம் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

சங்காபிஷேகத்தினை ஈசான சிவாச்சாரியார் சி. விவஸ்வத மூர்த்திக் குருக்கள் நடத்திவைப்பார். (ந)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் யூன் மாதம் 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறமும், 6 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும்,

மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த் தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

(6-4)

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு தன்னடக்கம்



இப்போது இந்தியாவில் நமது கவனத்தை ஈர்க்கும் பெரும் குற்றம் ஏதேனும் உண்டானால், அது இந்த அடிமைத்தனமே .ஒவ்வொருவருக்கும் ஏவ விருப்பம்; கீழ்ப்படிய விரும்புபவர்கள் யாரும் இல்லை. இதன் காரணம் என்னவெனில் பண்டைக் காலத்தின் ஆச்சரியமான பிரம்மச்சரிய முறை இல்லாததே முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள், ஏவும் நாள் தானாகவே வந்து சேரும். எப்போதும் முதலில் வேலைக் காரனாகக் கற்றுக்கொள், எஜமானாகும் தகுதி பின்னர் வரும்.

ஆன்மாவின் சக்தியையும் தூய்மையையும் சுருங்கச் செய்யும் எல்லா நினைவுகளும் செயல்களும் தீய செயல்களே. தீய நினைவுகளே ஆன்மாவை விரியச் செய்து உள்ளடங்கிய ஆற்றல்களை வெளிப்படுத்தும் எல்லா நினைவுகளும் செயல்களும் நற்செயல்களாம் அறச்செயல்களாம்.

# முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான சுற்று நிருபம்

## இம் மாதம் 28ஆம் திகதி வெளியிட தீர்மானம்

(கொழும்பு)

அடுத்த வருடம் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் மற்றும் சீர்திருத்தப்பட்ட சுற்று நிருபங்கள் எதிர்வரும் 28ஆம்திகதி செய்தித் தாள்களினூடாக வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர் வரும் யூன் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி வரை விண்ணப்பங்களை ஏற்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவிற்கு இணங்க முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான சுற்று நிருபத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சமர்ப்பிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்களும் அன்றைய செய்தித் தாளில் வெளியிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# இலங்கைக்கான இந்திய தூதுவராக தமிழரை நியமிக்க கோரிக்கை

## ஈழத் தமிழர் வாழ்வுரிமை மீட்பு இயக்கம்

(சென்னை)

இலங்கைக்கான இந்திய தூதுவராக தமிழரை உடனடியாக நியமிக்க வேண்டும் என்று ஈழத்தமிழர்வாழ்வுரிமை மீட்பு இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈழத்தமிழர் வாழ்வுரிமை மீட்பு இயக்கத்தின் கூட்டம் சென்னை பெரியார் திடலில் நடந்தது . கூட்டத்திற்கு திராவிட கழகத்தலைவர் கி. வீரமணி தலைமை தாங்கினார். இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பொன்குமார் கவிஞர் மு. மேத்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.


கூட்டத்தில், ஈழத் தமிழர்களை காப்போம் என்னும் பெயரில் முதலாம் திகதி சென்னை சைதாப்பேட்டையிலும் 7 ஆம் திகதி திருச்சியிலும் 13 ஆம் திகதி மதுரையிலும் பொதுக் கூட்டப்பேரணி நடத்துவது இலங்கையில் உணவு, மருந்து இன்றி போராடி கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு செஞ்சிலுவை சங்கம் மூலம் உதவிகள் செய்யவேண்டும்.

இலங்கைஜனாதிபதி ராஜபக்ஷவை போர் குற்றவாளியாக உலக நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். தமிழக எம்.பிக்கள உள்ளடக்கிய குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி உண்மைகளைகண்டறிய இந்திய அரசு ஏற்பாடு செய்யவேண்டும். இலங்கைக்கான இந்திய தூதுவராக தமிழர் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (6)

# க.பொ.த. உயர்தரம் 3 A,2A,B பெற்ற தீவக கல்வி வலய பாடசாலை மாணவர்களை இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய கௌரவிப்பு விழா நிகழ்வுகள்




வரவேற்பு நடனம்




தலைமையுரை ஆர். ஜெயேந்திரா
(செயற்பாட்டு முகாமையாளர், இ.வ.வடபிராந்தியம்)



வரவேற்புரை:- இ.சிவகுமார்
(முகாமையாளர், இ.வ.காரைநகர்)



வி.எஸ்.சிவநாதன்
(மாவட்ட முகாமையாளர், இ.வ.வடக்கு)




த.ஜெயசீலன்
(உதவி அரசாங்கஅதிபர், காரைநகர்)




க.திருமாலழகன்
(ஆலோசகர், வலம்புரி)



ஏ.கணேசானந்தராசா
(செயலாளர், பிரதேச சபை, ஊர்காவற்றுறை)




ஜீ.வி.இராதாகிருஸ்ணன்
(வலயக் கல்விப் பணிப்பாளர்- தீவகம்)




ஏற்புரை- ந. பரமசிவம்
(அதிபர்- யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்)



ஏற்புரை- செல்வி த.யசிந்தா
(வேலணை மத்திய கல்லூரி)



கு.சிவஞானசுந்தரம்
(முகாமையாளர், இ.வ.ஊர்காவற்றுறை)






அரங்கில் சபையோர், விருந்தினர்கள்...

# இரண்டாவது ஐ.பி.எல். கிண்ணம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி வசம்

## இறுதிவரை போராடிய பெங்களூர் அணி நழுவவிட்டது

(ஜோகனஸ்பேர்க்)

விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் 6 ஓட்டங்கள் வித்தியா சத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வென்று டெக்கான்சார்ஜர்ஸ் அணி 2 ஆவது ஐ.பி.எல். கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்தியன்பிரிமியர்லீக் (ஐ.பி. எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் 2 ஆவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்றது.

இத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று ஜோகனஸ் பேர்க்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியின் தலைவர் கும்ளே முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு முதலாவது ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் 3ஆவது பந்தில் பூச்சியத்துடன் அனில் கும்ளேயின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தார்.

அடுத்துகளமிறங்கிய சுமன் 10 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஆட்டம் இழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 3.3 ஓவர்களில் 18 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2ஆவது விக்கெட்டையும் இழந்தது.

இந்நிலையில் 3ஆவது விக்கெட்டுக்காக கிப்ஸுடன் ஜோடி சேர்ந்த சைமண்ட்ஸ் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்தார்.

இந்த ஜோடி 32 பந்துகளில் 40 ஓட்ங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய அன்ரூ சைமண்ட்ஸ் 21பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரோகித்



சர்மா சிறப்பாக துடுப்பெடுத்தாட மறு முனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிப்ஸ் ஆரம்பம் முதலே நிதானமாக துடுப்பெடுத்தாடினார்.

இதில் ரோகித் சர்மா 23 பந்துகளில் (ஒரு பவுண்டரி ஒரு சிக்ஸர் அடங்கலாக) 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 16.2 ஓவர்களில் 110 ஓட்டங்களை எடுத்த நிலையில் 4 ஆவது விக்கெட்டையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய வேணு கோபால் ராவ் ஓட்டமெதனையும் எடுக்காமலும் பிலாகியா 6 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

எனினும் மறு முனையில் நிதானமாக துடுப்பெடுத்தாடிய கிப்ஸ் அரைச்சதத்தை பூர்த்தி செய்ய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டையிழந்து 143 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கோர்சல் கிப்ஸ் 48 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 53 ஓட்டங்களையும் ஹரிஸ் 9 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் அணித்தலைவர் கும்ளே 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வினேய் குமார் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 144 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணி ஆரம்பத்தில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடியது.

எனினும் ஜக்கலிஸ் 17 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 16 ஓட்டங்களுடனும் பான்டே 8 பந்துகளில் 4 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 6.1 ஓவர்களில் 36 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய டிராவிட் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறு முனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய வான்டேர் மேர்வ் 21 பந்துகளில் (ஒரு பவுண்டரி,3 சிக்ஸர்கள் அடங்கலாக) 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரோஸ் ரெய்லர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்தார்.

எனினும் மறுமுனையில் டிராவிட் 13 பந்துகளில் 09 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்க பெங் களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 11.4 ஓவர்களில் 79 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டையும் இழந்தது.

தொடர்ந்து ரெய்லர்-ஹோலி ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியது.

எனினும் ரோஸ் ரெய்லர் 20 பந்துகளில் (3 பவுண்டரி,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 27 ஓட்டங்களுடனும் ஹோலி 07 ஓட்டங்களுடனும் சைமண்ஸின் பந்துவீச்சில் அடுத்தடுத்து ஆட்டம் இழக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 14.3 ஓவர்களில் 99 ஓட்டங்களை எடுத்து 6ஆவது விக்கெட்டை இழந்து திணறியது.

தொடர்ந்து களமிறங்கிய மார்க் பௌச்சர் 05,பிரவீன் குமார் 02, வினேய் குமார் 08 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்து சொதப்பினர்.

எனினும் றொபின் உத்தப்பா இறுதிவரை போராடிய போதும் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட் டங்களை மாத்திரம் எடுத்து 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதன் மூலம் இரண்டாவது ஐ.பி.எல்.கிண்ணத்தை கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி கைப்பற்றியது.


இதில் றொபின் உத்தப்பா 17 ஓட்டங்களையும் கும்ளே ஒரு ஓட்டத்தையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரஜன் ஓஜா 3 விக்கெட்டுக்களையும் அன்ரூ சைமண்ட்ஸ்,ஹார்மித் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹரிஸ், ஆர் பி சிங் ஆகியோர் தலா ஒரு விக்



கெட்டையும் வீழ்த்தினர்.

## ரோகித் சர்மாவுக்கு சிறந்த வீரர் விருது



(ஜோகனஸ்பேர்க்)

ஐ.பி.எல். தொடரின் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான சிறந்த வீரர் விருதை வென்றார் டெக்கான் சார்ஜர்ஸ் அணி வீரர் ரோகித் சர்மா.

தென்னாபிரிக்காவில் நடக்கும் ஐ.பி.எல்.இருபது-20 கிரிக்கெட் தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி சார்பில்விளையாடிவருகிறார்ரோகித்சர்மா.

டெக்கான் சார்ஜர்ஸ் அணி சார்பில் சகலதுறை வீரராக அசத்திய இவர், இரண்டாவது ஐ.பி.எல். தொடரில் 23 வயதுக்குட்பட்டோருக்கான சிறந்த வீரர் விருதை கைப்பற்றி அசத்தினார்.

முன்னாள் இந்திய அணித் தலைவர்களான சுனில் கவாஸ்கர், ரவிசாஸ்திரி, பட்டோடி ஆகியோர் அடங்கிய தேர்வுக்குழு ரோகித் சர்மாவை ஒருமனதாக தேர்வு செய்துள்ளது.

இவ்விருதுடன் ரூபாய் 10 இலட்சம் பரிசுதொகையையும் தட்டிச்சென்றார் ரோகித் சர்மா.

விருது வென்றதை குறித்து ரோகித் கூறுகையில்;

சிறந்த வீரருக்கான விருது வென்றதை பெருமையாக கருதுகிறேன். தென்னாபிரிக்காவில் சிறந்த ஆட்ட நிலையுடன் விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது.

இத் தொடர் முழுவதும் அனுபவித்து ஆடி வருகிறேன். எனது செயல்பாடுகளை அங்கீகரித்த முன்னாள் இந்திய அணித்தலைவர்கள் எனக்கு இன்ப அதிர்ச்சியை அளித்துள்ளனர் என்றார்.

சிறந்த வீரர் விருதுக்கு 14 லீக் போட்டிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளன.

இதில் ரோகித் 333 (சராசரி 27.75) ஓட்ங்களும் ,11 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தி உள்ளார்.

தவிர ஒரு ஹட்ரிக் விக்கெட்டும் வீழ்த்தி உள்ளார். விருது வென்ற ரோகித் சர்மாவை ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி வெகுவாக பாராட்டி உள்ளார்.

## பாகிஸ்தான் அணியில் மீண்டும் முகமெட் யூசுப்



(கராச்சி)

பாகிஸ்தான் அணியில் மீண்டும் முகமெட் யூசுப் இடம் பெற உள்ளார். பாகிஸ்தானின் முன்னணி வீரரான முகமெட் யூசுப், அணியிலிருந்து விலகி இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) அமைப்பில் இணைந்தார்.

அங்கீகாரம் இல்லாத இவ் அமைப்பில் இணைந்த முகமெட் யூசுப் உள்ளிட்ட வீரர்களுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) தடை விதித்தது. இதையடுத்து அவர்கள் தேசிய அணியில் வாய்ப்பை இழந்தனர்.

இந்நிலையில் வீரர்கள் மீதான தடையை பி.சி.பி. கடந்த மாதம் நீக்கியது. தவிர எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் ஐ.சி.எல். அமைப்பில் இருந்து விலக வேண்டும் எனவும் நிபந்தனை விதித்தது.

இதையடுத்து முகமெட் யூசுப் ஐ.சி.எல் அமைப்பில் இருந்து விலகி தேசிய அணியில் வாய்ப்பை எதிர் நோக்கி உள்ளார்.

இது குறித்து பி.சி.பி. தலைவர் இஜாஸ் பட் கூறுகையில்;

ஐ.சி.எல். அமைப்பில் இருந்து விலகிய முகமெட் யூசுப்பிற்கு தேசிய அணியில் கட்டாயம் இடம் அளிக்கப்படும். பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு யூசுப்பின் சிறப்பான செயல்பாடு அவசியம். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

அதே சமயம் அங்கீகாரம் இல்லாத ஐ.சி.எல். அமைப்பில் இணைந்த வீரர்களுக்கு குறைந்த பட்ச அபராதம் விதிக்கப்படும் என்றார். இதையடுத்து அடுத்த மாதம் இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் யூசுப் இடம் பிடிப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

## தென்னாபிரிக்காவின் ட்யூன் கோஸட்ஸ் ஐ.பி.எல். அழகியாக தெரிவானார்

(ஜோகனஸ்பேர்க்)

கிழக்கு லண்டனை சேர்ந்த 35 வயது மாடல் அழகியான ட்யூன் கோஸட்ஸ், மிஸ் பாலிவூட் ஐ.பி.எல். தென்னாபிரிக்கா பட்டத்தை வென்றுள்ளார்.

ஜோகனஸ்பேர்க்கில் நேற்றுக் காலை மான்டி காசினோ என்டர் டெய்ன்மென்ட் வளாகத்தில் நடந்த வண்ணமிகு நிகழ்ச்சியில் அவருக்கு இந்த பட்டம் சூட்டப்பட்டது.

ஒவ்வொரு ஐ.பி.எல். போட்டியின் இறுதியிலும் ஒரு அழகி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்.

மொத்தம் 48 அழகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் ஒருவரை மிஸ் பாலிவூட் ஐ.பி.எல். தென்னாபிரிக்கா பட்டத்திற்கு இணையத்தள வாக்கெடுப்பு மூலம் தேர்வு செய்தனர்.

அதில் ட்யூன் கோஸட்ஸ் வெற்றி பெற்றார். இவருக்கு ஷாருக்கானுடன் நடிக்கும் வாய்ப்பு வழங்கப் படும். இதுதவிர மேலும் பல பரிசு



களும் வழங்கப்படும்.

இந்த வித்தியாசமான போட்டி தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல். போட்டிகள் தொடங்குவதற்கு முன்பு அறிவிக்கப்பட்டது.

ஜோகனஸ்பேர்க்கைச் சேர்ந்த பட்டதாரி பெண் ஜென்னா கிளவுட் (24 வயது) 2ஆவது இடத்தைப் பெற்றார்.

இவருக்கு முதல் இளவரசி என்ற கூடுதல் பட்டமும் கிடைத்தது. 2 ஆவது இளவரசியாக டுடனே நோரே தேர்வானார்.

இதுவரை ஒரு பாலிவூட் படம் கூட பார்த்ததில்லையாம் ட்யூன். இருப்பினும் உடனே போய் பாலிவூட் படங்களைப் பார்க்க வேண்டும் என ஆவலாக இருப்பதாக கூறியுள்ளார்.

மேலும் இந்தி கற்கவும் போகிறாராம். இந்தப் போட்டியில் நிறைய இந்தியப் போட்டியாளர்களும் இருந்தனர்.

ஆனால் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 3 பேர் தான் முதல் 3 இடங்களை பிடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியில் வெற்றிபெற்ற ட்யூனுக்கு தங்கம்,வெள்ளி,வைர நகைகள்,அரியவகை கற்கள் உள்ளிட்டவை பரிசாக கிடைத்தன.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முன்னாள் மிஸ் யுனிவர்ஸ் அழகி மிஷல் மெக்லீன் இந்தப் பரிசுகளை வழங்கினார்.

முன்னதாக மெக்லீன் பங்கேற்ற நடன நிகழ்ச்சியும் நடந்தது.இதில் ஐ.பி.எல். தலைவர் லலித் மோடியும் கலந்து கொண்டு ஆடினார்.

# வெள்ளைக் கொடியுடன் சென்ற போதே...

கொல்லப்பட்டதாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அவர்கள் சரணடைய முன்வரும்போது தான் கொல்லப்பட்டார்களா? உங்களுக்கு கிடைத்த தகவல் என்ன?

**பதில்:** நடேசன், புலித்தேவன் இருவரும் 17ஆம் திகதி இரவு பல தடவை என்னுடன் பேசினார்கள். எமது மக்கள் படும் துயரங்களை, எமது மக்கள் கொன்று குவிக்கப்படுவதைப் பார்த்து தாங்க முடியாத துக்கத்தில் நாம் இலங்கை அரசாங்கத்துடன் இந்தப் போரை ஒரு முடிபிற்கு கொண்டுவரும் நோக்கில் அவர்கள் இலங்கை இராணுவத்துடன் பேசுவதற்காக வெள்ளைக் கொடியுடன் போன போது படையினர் அவர்களை சுட்டுக்கொன்றனர்.

**கேள்வி:** ஐ.நா. மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக உங்களால் கூறமுடியுமா?

**பதில்:** சரணடைய அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. போர் நிறுத்தமொன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை இராணுவத்துடன் பேசுவதற்காக என் மூலம் சில முயற்சிகளை எடுத்த போது எமது சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் பேசப்பட்டது.

அவர்கள் வெள்ளைக் கொடியுடன் வந்து இலங்கை இராணுவத்துடன் பேசும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் அங்கு சென்றார்கள்.

**கேள்வி:** இந்நிலையில் உங்களது அமைப்பின் எதிர்காலத் திட்டமென்ன? என்ன செய்ய இருக்கிறீர்கள்?

**பதில்:** எமது தலைவர், எமது தளபதிகள், போராளிகள் எல்லோரும் என்னிடம் கேட்டுக் கொண்டது எமது மக்களிற்கு எமது மக்கள் மானிடப் பிறவிகளாக ஒரு மனித இனத்திற்கு கொடுக்கப்படவேண்டிய கௌரவம், மரியாதையுடன் வாழ்வதற்கு அவர்கள் மற்ற இனத்துடன் சமமான உரிமையுடன் வாழ்வதற்கு நாம் அதாவது மிகுதியாக இருக்கும் போராளிகள் எமது தமிழ் மக்கள், எமது புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள், உலகளாவிய தமிழ் மக்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களிற்கு அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று என்னிடம் கேட்டார்கள்.

எனவே நாம் எமது மக்களிற்கு அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தொடர்ந்து முயற்சிகளை எடுப்போம்.

**கேள்வி:** உங்களது அமைப்பு இலங்கையில் முற்று முழுதாக தோற்கடிக்கப்பட்ட அமைப்பாக இருக்கிறது.

உங்களது தளபதிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். உங்களது அணிகள் கொல்லப்பட்டும் இராணுவத்தால் பிடிபட்டும் உள்ளார்கள்.

இந்த சூழலில் உங்கள் அமைப்பு எப்படி மீண்டும் அங்கே கட்டமைக்கப்படும்? அவ்வாறான திட்டமேதும் இச் சூழலில் இருக்கிறதா?

**பதில்:** புலிகளின் ஆயுதப் போராட்டம் இலங்கை அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்டது எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற ஒன்று. நாம் அதனை புரிந்து கொண்டோம்.

எமது போராளிகள் இன்னும் மக்களுடன் மக்களாக இருக்கின்றார்கள். எமது மக்கள் எம்முடன் இருக்கிறார்கள். எனவே நாம் உரிமையை வென்றெடுப்பதற்கு ஒரு ஜனநாயக அதேநேரம் சமாதான முறையில் சமாதான வழியில் அகிம்சா முறையில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க முயற்சிகள் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:** எனவே நீங்கள், இராணுவ ரீதியிலான இந்தப் போராட்டம் முடிபிற்கு வந்துவிட்டது.இனிமேல் அடுத்த கட்டப்போராட்டம் என்பது அரசியல் ரீதியான அகிம்சைப் போராட்டம் என்பதுதான் என்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது என்று கூறுகிறீர்களா?

**பதில்:** நான் ஏற்கனவே அறிவித்த அறிக்கையின்படி எமது போர்க்கருவிகளை நாம் வைத்துவிட்டோம்.நாம் வன்முறையைத் தவிர்ந்த ஏனைய வடிவங்களில் எமது உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்து முயற்சிகள் எடுப்போம்.

**கேள்வி:** நாடாளுமன்றில் உங்களுக்கு ஆதரவாக இயங்கிவந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நீங்கள் பயன்படுத்திக் கொண்டு இவ்வாறான ஜனநாயக அரசியலை அல்லது நாடாளுமன்ற அரசியலை அல்லது நீங்கள் கூறுவது போல் வன்முறையற்ற அரசியலை முன்வைத்து தமிழர்களுக்கு உரிமைகளை வென்றெடுப்பதற்கான அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லப் போகின்றீர்களாஅல்லது நீங்களே ஏதாவது தனியான அரசியல் கட்சியொன்றை தொடங்குதவதற்கான உத்தேசம்இருக்கிறதா?

**பதில்:** நாம் வன்முறையை தவிர்ந்த வழிகளில் தமிழர் கூட்டமைப்பு, மீதியிருக்கும் போராளிகள். அதேபோன்று வெளிநாடுகளில் வாழும் புத்திஜீவிகள் எல்லாவிதமான தமிழ் இயக்கங்கள், கட்சிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒருஅணியின் கீழ் நாம் இந்த உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

**கேள்வி:** உங்களது வன்முறையற்ற போராட்டம் என்பது மீண்டும் தனித் தமிழீழத்திற்கான போராட்டமா இருக்குமா? அல்லது இலங்கைத் தீவிற்குள் தமிழ் மக்கள் சமவுரிமையுடன் வாழவேண்டுமென்கின்ற இலட்சியத்துக்கான போராட்டமா இருக்குமா?

**பதில்:** இந்தக் கேள்விக்கு நாம் எமது சகல பிரிவினருடன் கலந்தாலோசித்து எமது மக்களை, மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கக் கூடிய ஒரு வடிவத்தை நாம் தேர்வு செய்வோம். அதனை நாம் விரைவில் சர்வதேச அரங்கில் முன்வைப்போம்.

**கேள்வி:** எதிர்வரும் காலகட்டத்தில் எங்கு இருந்து இயங்கப்போவதாக நீங்கள் திட்டமிட்டிருக்கிறீர்கள்? உங்களது தலைமை என்பது இனிமேல் எப்படியிருக்கும்?

**பதில்:** அமைப்பின் தலைமை ஒரு கூட்டுத் தலைமையாக இருக்கும். அது எங்கே இருந்து இயங்குவது என்பது பற்றி நாம் விரைவில் உங்களுக்கு தெரியப்படுத்துவோம். (ந-5,14)

# நலன்புரி முகாம்களை...

அவர்கள் அவரை சந்தித்திருக்கலாம். ஆனால் விமான நிலையத்தில் வைத்துச் சந்திக்க அவர்கள் முயன்றார்கள். விமான நிலைய அதிகாரிகள் அப்படிப்பட்ட விடயங்களை அனுமதிக்க மாட்டார்கள். விமான நிலையம் சந்திப்புக்கள் நடப்பதற்குரிய இடமல்ல. அது ஒரு சாப்பாட்டுக்குரிய கடையோ றெஸ்ரோரன்ரோ கிடையாது. அங்குபோய்எப்படி ஆட்களைச்சந்திப்பது!

முகாம்களில் பணியாற்றுவதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றது. அப் பகுதியில் 52 தொண்டு நிறுவனங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றீன. ஆனால் நாம் அங்கு அவர்களை அனுமதிப்பதில்லை என்று தப்பான செய்திகளை சிலர் சொல்லி வருகின்றார்கள். பான் கீ மூனிடம் நாங்கள் கூறியிருக்கிறோம் ஐ.நாவின் அனைத்து தொண்டு நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கியிருக்கின்றோம்.

முகாம்களில் இருப்பவர்கள் யார் எவர் என்று எங்களுக்கு தெரியாது. அதனால் தான் நாங்கள் அவர்களை ஒவ்வொருவராக ஆராய்ந்து அறிந்து வருகின்றோம்.

அவர்கள் பற்றிய செய்திகளை அறிய வேண்டும். தகவல்கள் திரட்டப்படவேண்டும். புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவை எல்லாம் சிறிது காலத்துக்குத் தான். அதன் பிறகு நாங்கள் அவர்களுக்கு பயிற்சிகளைக் கொடுப்போம். அவர்கள் இத்தனை காலமும் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்தவர்கள். புலிகள் சொல்வதைத் தவிர இவர்களுக்கு வேறு எதுவும் தெரிந்திருக்காது. அதனால் அவர்களுக்கு நாங்கள் புனர்வாழ்வு வழங்க வேண்டும். ஏதாவது தொழில் துறையில் பயிற்சிகள் கொடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-14)

# பான் கீ மூனை...

பதாகவும் பான் கீ மூன் தெரிவித்ததாக ஐக்கிய நாடுகளின்பேச்சாளர்ஒருவர்தெரிவித்திருந்தார்.

எனினும் அதற்கு அரசாங்கம் பல்வேறு காரணங்களைக் காட்டி தடை விதித்து வந்தது.இந்நிலையில் நேற்று முன்தினம் பான் கீ மூன் இலங்கையில் இருந்து புறப்படும் வேளையில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாக வெளிவிவகார அமைச்சு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு தெரிவித்திருந்தது.விமான நிலையத்தில் வைத்து இடம்பெறவிருந்த இந்த சந்திப்புக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அங்கு சென்றிருந்தனர்.

எனினும் சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கும் மேலாக காத்திருந்த போதும்,பான் கீ மூனையும், ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்திக்க முடியாமல் போனதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# புலிகளின் தலைவர் பிரபாகரன்...

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரம் வருமாறு,

தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும், செழுமையான எதிர்காலத்திற்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்துப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும் தலைமைத் தளபதியுமாகிய வே.பிரபாகரன் சிங்கள படைகளுடனான போரில் வீரச்சாவினை தழுவியுள்ளார் என்பதை அனைத்து தமிழீழ மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தாங்கொணா துயருடன் அறியத்தருகின்றோம்.

கடந்த 37 வருடங்களாக தமிழீழ மண்ணில் பொங்கிப் பிரவாகித்த விடுதலை வரலாற்றின் ஆன்மாவாகவும் குறியீடாகவும் விளங்கியவர் எமது தலைவர்.

ஒரு கால் நூற்றாண்டுக்கு மேலாக அடக்குமுறைக்கு முகம் கொடுத்து நின்ற ஒரு தேசிய இனத்தின் வரலாற்றையே மாற்றுகின்ற விருப்போடும் துணிவோடும் நம்பிக்கையோடும் எதிரிக்கு எதிரான விட்டுக்கொடுப்பற்ற ஒரு பெரும் விடுதலைப் போரை தலைமையேற்று நடத்தியவர் அவர்.

கற்பனைக்கு எட்டாத தற்தியாகமும், கட்டுப்பாடும், வீரமும், ஒழுக்கமும் நிறைந்த உன்னதமான ஒரு விடுதலை இயக்கத்தைக் கட்டியெழுப்பி, பெரும் படையணிகளோடும் ஒரு தனித்த தேசத்திற்குரிய நிர்வாகக் கட்டமைப்புகளோடும் கனரக ஆயுத வல்லமைகளோடும் போராட்டத்தை வழி நடத்தினார்.

அரசியல் போராட்டத்திற்கு இணையாக சமூக மாற்றத்திற்கான போராட்டங்களையும் முன்னெடுத்தார்.

போராட்டக் களங்களில் எமது மகளிர் நிகழ்த்திக்காட்டிய சாதனைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்ததன் மூலம் எமது சமூகத்தில் பெண்களுக்கு இருந்த தனித்துவமான பங்களிப்பை வெளிக்காட்டியவர் அவர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மீதும், தமிழக மக்கள் மீதும் உலகம் முழுவதும் பரந்துவாழும் உறவுகள் மீதும் அவர் கொண்டிருந்த பற்று மிகவும் ஆழமானது.

தமிழர் போராட்ட வரலாறு நெருக்கடிகளை எதிர்நோக்கி, மீள முடியாத கட்டத்தை எதிர்கொண்ட காலங்களில் அவற்றை எல்லாம் துணிச்சலோடு எதிர்கொண்டு விடுதலையை அடுத்த கட்டத்திற்கு வேகமாக நகர்த்தியவர் எமது தலைவர்.

தலைவரின் போராட்ட அனுபவமும், தற்துணிவும், வீரமுமே எவ்வித நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் உந்து சக்தியாக, எமது போராட்ட சக்கரத்தின் அச்சாணியாக இருந்திருக்கிறது.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்து, சர்வதேச சக்திகளின் துணையுடன் ஒரு பெரும் யுத்தம் மீண்டும் எம் மீது திணிக்கப்பட்டபோது தலைவர் பிரபாகரன் அதனை துணிவுடனேயே எதிர்கொண்டார்.

போர் நெருக்கடியான கட்டங்களை எட்டி எமது நிலப்பரப்புகள் எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டு ஒரு பெரும் யுத்தம் எம் மக்கள் மீது ஏவி விடப்பட்ட போதும் தலைவர், தான் வாழ்ந்த மக்களுடனேயே நின்றார்.

மக்களதும் தளபதிகளினதும் தொடர்ச்சியான வேண்டுகோள்களையும் மீறி அவலப்படும் மக்களை விட்டு வெளியேற மறுத்தார். எமது மக்கள் எதிர் கொண்ட அத்தனை வலிகளையும் தானும் சுமந்தார்.

இறுதியில் விடுதலைக்கான இந்த நீண்ட பாதையில், எந்த மக்களுக்காக ஆயுதமேந்தினாரோ அம் மக்களுடனேயே கடைசி மணித்துளி வரை நின்று போராடி வீரச்சாவடைந்தார். 'எம் மக்களுக்கு உரிமைகளைப் பெற்று கொடுங்கள்' என்பதே அவரது இறுதிக் வேண்டுகோளாக இருந்திருக்கின்றது.

வரலாற்றின் ஓர் உண்மை மனிதனாக, ஒரு விடுதலைப் போராளியாக, அடிமைப்பட்டுப்போன ஓர் இனத்தின் மீட்பராக ஒரு சமூகத்தின் அரசியல் வழிகாட்டியாக, விடுதலையின் ஒரு குறியீடாக தமிழினச் சின்னமாக, உலக தமிழ் இனத்தின் ஒரு வரலாற்று நாயகனாக வாழ்ந்த 'எங்கள் தலைவர் மறைந்து விடவில்லை.

தமிழீழ தேசத்தின் தலைமைச் சுடராக எம் தேசமெங்கும் அவர் ஒளி வீசிக்கொண்டிருக்கிறார். மானிடத்தின் விடுதலையை நேசிக்கும் எல்லோர் மனங்களிலும் அவர் என்றும் நிறைந்திருக்கின்றார்.

அழிவென்பதே அற்ற ஒரு தத்துவார்த்த ஒளியாக அவர் எங்கும் நிறைந்திருக்கின்றார். உலகெங்கும் விடுதலையை அவாவி நிற்கும் இனங்களுக்கு தலைவரின் வாழ்க்கை ஒரு வழி காட்டி . எம் மக்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுங்கள் என்பதே அவர் எங்களுக்கு விட்டுச் சென்றிருக்கும் விடுதலைப் பத்திரம்.

இவ்வாறு புலிகளின் வெளியுறவுப் பேச்சாளர் செல்வராசா பத்மநாதன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.